
# ஆத்மாவின் இராகங்கள்



நெலோமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாவின் இராகங்கள்

(கவிதைத் தொகுப்பு)

## நெலோமி

40376

ஸ்ரீனா
வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மாவின் இராகங்கள்

ஆசிரியர் : திருமதி.நெலோமி அன்ரனி குரூஸ்
முதலாம் பதிப்பு : மார்கழி 2005
பக்கங்கள் : xiii+103
அட்டைப்படம் : க.ரணேஷ்
விலை : 150/=
பிரதிகள் : 1000
வெளியீடு : ஸ்தீனா வெளியீடு
அச்சகம் : மல்ரிவிஷன் அச்சுக்கலையகம் வவுனியா.

Aathmaavin Irakankal
Author : Mrs.Nelomi Antony Croos
First Edition : December 2005
Pages : xiii+103
Cover Design : K.Ranesh
Price : Rs.150/=
Copies : 1000
Published by : Steena
Printed By : Multivision Printers
ISBN : 955 - 99420-0-X



# ஆசியுரை......

கவிதைக்கு ஆசியுரை எழுதுவதில் பரீட்சயம் அதிகம் இல்லை. இருந்தும், இக்கவிதைகளை வாசித்ததும் இத்தகைய எழுத்தாளர்களை, புலவர்களை ஊக்குவிக்க வேண்டும். மென்மேலும் கவிதைக் கொத்துக்கள் வெளிவரவேண்டும் எனும் ஆவல் ஏற்பட்டது. எனவே மிக மகிழ்வுடன் என் வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

இன்று பொழுது போக்குச் சாதனங்களும், தொடர்புக் கருவிகளும், புத்தம் புதியனவாய் நாளொருவண்ணம் பொழுதொரு மேனியாய் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. மக்களும் இவற்றிற்கு தவமிருந்து அடிமைப்படுகின்ற நிலை சர்வசாதாரணமாகிவிட்டது. எழுத்தாளரின் அத்தியாவசியமும், வாசனையின் கனாகனமும் பின் தள்ளப்படுவது வேதனைக்குரியது. வாசகரும், வாசகர் வட்டமும், ஆய்வுரை அரங்குகளும், எழுத்தாளருக்கு விருந்தாகின்றன. இவை இன்று அருந்தலாகின்றது. இந்நிலை மாறி ஆங்காங்கு ஒழிவு மறைவில் இருக்கும், அருமை பெருமை வெளிப்படாத எழுத்தாளரை வெளிக் கொணர்வதும், இவர்களை உற்சாகமூட்டி உந்திக் கொடுப்பதும் வாசகராகிய எமது மாபெரும் கடமை என்பதை நெலோமி அவர்களின் படைப்புக்கள் உணர்த்தி உறுத்தி நிற்கின்றன. இவரது கவிதைத் தொகுப்பு எந்தளவுக்கு எம்மவரால் கௌரவிக்கப்பட்டு, அவற்றின் கனாகனம் உணர்த்தபடுகிறதோ அந்தளவுக்கு நாம் எழுத்துலகுக்கு நன்மை புரிந்தவராவோம்.

நெலோமி அவர்களின் தமிழ் மொழி ஆற்றலையும், சொல்வளப் பிரயோகத்தையும் எதிர்பாராது வகுப்பொன்றில் கண்டு திகைத்துப் போனேன். அவ்விடம் விட்டகலாது நின்ற நிலையிலேயே ஆசிரியரின் பேச்சில் வந்து சென்ற புலவர்களையும், நடமாடிய கவிதைகளையும் காதுகுளிரக் கேட்டுப் பரவசமடைந்ததை மறக்கவே முடியவில்லை. இவ் ஆசிரியரின் ஆற்றல் அனைத்தையும் கூடியளவு மாணவர் பெற்றுப் பயனடைய வேண்டுமென துடித்தேனே ஒழிய நேரம் ஒதுக்கி வசதி செய்து இடமளித்து பாடலைப் படைக்கும் படி செய்யவில்லையே என்ற உணர்வுதான் இக் கவிதைகளை வாசிக்கையில் வந்து செல்கின்றன.

அம்மா தாயே தொடர்ந்து எழுதுங்கள், மனதில் ஒழிந்து மறைந்து இருப்பதை எழுத்தில் வடித்துத் தாருங்கள். உங்கள் சிந்தைக்கு எதுவுமே நல்விருந்தாகிவிடும். எப்பொருள் உண்டோ, அப்பொருள் எல்லாம் உம் கையில் வளைந்து நிற்கும் என்பதை உம் படைப்புக்கள் காட்டுகின்றன.
கண்ணிமைக்கும் முன் கருத்தொன்று வந்துவிடும். கவிதை ஒன்று பிறந்து விடும், இது இன்று நேற்று அல்ல அன்றே உம்மிடம் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இதைக் கூற ஆவல் கொண்டேன். வசதி படைத்தாய் நன்றி.

இக்கருக்கள் காலங்கடந்த மரபுவழிப் பொருட்கள் அன்று, மாறாக அண்மையில் சூழ்ந்து வந்து கொட்டித் தொலைத்த ஆழிப்பேரலையின் அநியாய விளைவுகள், அன்றாட அவலங்கள், தினசரிக் கூத்துக்கள், கும்மாளங்கள், மாயஉலகின் பூகோளமயமாகும் போர்வையில் தப்பிப் பிழைத்துத் தனித்தியங்க வேண்டிய தனித்தமிழ்ப்பக்தி மொழி, சிறியனபெரியன அனைத்துமே உம்மை வலம் வரவைக்கும் சாகசத் திறனை ஏனம்மா முடங்கிக் கிடக்க வேண்டும்.

ஆமாம் நீ தாய்க்குலத்தவள், குடும்பப் பொறுப்பு, ஆனால் அருமையான அன்பான பண்பான குடும்பத்தவர், இவர்களின் ஆக்கமும் ஊக்கமும் உம்முடன் உள்ளன. பின்னடையாதே, கருத்துக்கு இசைந்த சொல்வளம் அதை மெருகூட்டும் சந்தம், இவ்விரண்டையும் அணி செய்யும் நயம் யாவும் உம் வசம்தானே. இது உனக்கு கைவந்த கலைதானே தயங்காதே முன்னேறிச் செல், ஆக்கங்களை ஆக்கிக் கொண்டேயிரு அளித்துக்கொண்டே செல்....

எவ்வயதினரும் விரும்பிப்படிக்கும் இக்கவிதைகள், எப் பருவத்தினரும் ஆசையுடன் நாடுவர். மரபுப் பொருள் தானே என்று அலட்சியமாய் வாசிக்கத் தொடங்கினால், புதிய தொனியும், நடைமுறையும், இதுவரை கண்டுணராத கருத்தொன்றும் என் முன் வந்து நின்று உலுப்பி என் ஆவலைத் துண்டுவதை உணராமல் இல்லை.

இப் பொருளும் கவிதைக்குக் கருவாகுமோ, இச் சொல்லும் சந்த நயத்துடன் அரங்கேறுமா? என்று எண்ணியவர்க்கு சாட்டை அடிகொடுத்து படிக்க மட்டுமல்ல படைக்கவும் சாமானிய மனிதர் பலரை ஏவிநிற்கிறது உமது கவிதை. எந்தத் தலைப்பை நீ தொட்டாயோ அந்த விடயத்தை வியப்புடனும், நயப்புடனும் நோக்கி பொதிந்துள்ள புதுமை எதுவென நோக்கத் தூண்டுகின்றது.

எனவே இக்கவிதைத் தொகுப்பு மட்டுமல்ல இன்னும் பல வெளிவரவேண்டும் உள்ளங்கள் வேதனைகள் வெளியேற வேண்டும், ஏழைகளின் துயர்கள் அரங்கேற இனியும் அவை இல்லாதொழிய வேண்டும் பாடுமகளே பாடு, படைத்தவன் உனக்களித்த கடமை, அது கவிதைப் படைப்பு அதை தொடர்ந்து கொண்டிரு என் வாழ்த்துக்களும், இறை ஆசிகளும் உம் அண்டை வந்து சேர வாழ்த்தி ஆசித்து நிற்கிறேன்.

**சிஸ் மேரி யூட் மடுத்தீன்**
**மாகாண தலைமைத்துவ குழு அங்கத்தவர்**
**திருக்குடும்பக் கன்னியர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**



## ஆளுமை மிக்க கவிதா ஆற்றல் கரைபுரண்டோடத் தொடங்குகின்றது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இலக்கிய விழா கவியரங்கின் போது ஓர் இளம் பெண்மணி கவிதை வாசித்துக் கொண்டு இருந்தார்.

கவித்துவ வீச்சும் உணர்ச்சி வெளிப்பாடும் கருத்தாழமும் கொண்ட அக்கவிதையை நுகர்ந்த போது எனக்கு வியப்பாகவிருந்தது. இத்தகைய மேடைகளைப் பயன்படுத்தி நடத்துவோரின் நோக்கங்களைத் தெரிந்து கொண்டு கைதட்டலுக்காக கவிபாடும் இந்நாட் சூழலில் அலட்டிக் கொள்ளாமல் தன்போக்கில் கவிபாடிய அந்த ஆளுமை பற்றி அறிந்து கொள்ள நான் முயற்சித்தேன்.

அப்போது கிடைத்த தகவல் எனக்கு இனிப்பாக இருந்தது. அவர் ஓர் ஆசிரியை என்பது தான் அந்தத் தகவல். எமது கல்விப் புலத்தைச் சார்ந்தவர் என்பதால் மீண்டும் சந்திக்கலாம் என்பதே மகிழ்ச்சிக்குக் காரணம்.

அந்தக் கவித்தாரகைதான் இந்த நெலோமி அன்ரனிகுரூஸ். அதைத் தொடர்ந்து ஆசிரியர் தினம், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் போன்றவை நடாத்திய இலக்கியப் போட்டிகளின் போது அவருடைய கவிதை, சிறுகதை, நாடகப் பிரதி என்பனவற்றையும் வாசிக்கக் கூடிய வாய்ப்புக் கிட்டியது. அவரை வகைநிலைப்படுத்தாமல் ஆக்க இலக்கிய வாதி என்று சொல்வதே பொருத்தமானதாகும்.

ஒருமுறை அலுவலகத்தில் சந்தித்த போது “உங்கள் கவிதைகள் சிலதை தொகுத்து வெளியிடலாமே” என்று கேட்டு வைத்தேன். அதற்கு அவர் சாதகமான பதிலெதுவும் சொல்லவில்லை. தான் யார்? தனது பெறுமதி என்ன? என்பதை இவர் இன்னும் புரிந்து கொள்ளவில்லையே என்று ஆதங்கப்பட்டேன். இது சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்த கதை.

தொடர்ந்து எனது தகவல் வங்கியில் நெலோமி பற்றிய தகவல்கள் சேகரமாகிக் கொண்டிருந்தன. மன்னாரில் பிறந்து செட்டிகுளத்தில் புகுந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். இலக்கிய ஆர்வலர் அன்ரனி குரூஸ் இவரது கணவர். பதினைந்து நூல்களை வெளியிட்டுள்ள நாவண்ணனின் மகள். படிக்கும் காலத்தில் இவரது இலக்கியப் புலமையை இனம் கண்டவர்களில் சிரித்திரன் சுந்தரும் ஒருவர். பட்டதாரி ஆசிரியையாக இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் கடமையாற்றிய போது நெலோமியின் ஆற்றலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையார்வம்மிக்க அதிபர் அருட் சகோதரி யூட் மடுத்தீன் வெகுவாகப் பயன்படுத்திக கொண்டார்.

அண்மையில் நெலோமி தனது கணவருடன் எனது அலுவலக அலகுக்குள் பிரவேசித்த போது, ஏதோ உத்தியோக பூர்வவிடயம் என்றே நினைத்தேன். அது தவறாகிவிட்டது. நான் ஒரு கவிதைத் தொகுதி வெளியிடப் போவதாகக் கூறி, அதற்கு எனது பங்களிப்பை எதிர்பார்த்து நின்றார்.

என்றோ நான் எதிர்பார்த்தது இன்றாவது கைகூடியதில் எனக்குப் பேரானந்தம். ஆத்மாவின் இராகங்கள் என்ற கவிதைத் தொகுதி கைமாறியது. ஆசிரியை தனது முகவுரையிலே பல விடயங்களை மனம் திறந்து கதைத்துள்ளார். கவிதையில் அவர் மரபு, புதுமை என்ற அணிசேரா நிலையைக் கடைப்பிடித்திருக்கிறார். புதுக்கவிதைப் பிரவேசம் நிகழ்ந்த 1970களில் பெரும் வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. இன்று எந்த வடிவமாக இருந்தாலும் பாத்திரம் முக்கியமல்ல பண்டம் தான் முக்கியம் என்ற நிலை வந்து விட்டது.

இத் தொகுதியில் பேர்பாதிப்பக்கங்களை கவியரங்கக் கவிதைகளே ஆக்கிரமித்துள்ளன. அரங்கக் கவிதைகள் செவிப்புலனோடு தொடர்புடையன. ஒத்திசை, மெல்லிசை, சந்தம், உணர்ச்சிக்கேற்ற வெளிப்பாடு என்பன கவிதைச் சுவையர்களை உள்வாங்கி விடுகின்றது.

நெலோமியின் அரங்கக் கவிதைகள் பெரிதும் வெற்றி பெற்றுள்ளன. மரபு சார்ந்து எழுதும் போது வார்த்தைகள் வரிசையாய் வந்து நிற்கின்றன. சுனாமி பற்றி ஒரு கட்டத்தில் இவ்வாறு எழுதுகிறார்.

கும்பிட்ட கோவில்
கடலுடன் போனது
கூடங்கள் மாடங்கள்
கூழமாய் ஆனது
அம்பிட்ட பொருட்கள்
ஆழியுள் போனது
ஆயிரம் ஆயிரம்
அழிவுகள் ஆனது

ஐந்து மணியாச்சா.... என்ற கவிதையிலே ஓர் ஆசிரியை கடமையும் வீடுமாய் படும்பாட்டை மிக யதார்த்தமாகச் சித்தரித்துள்ளார். ''நுளம்பு'' கவிதை மிகவும் சுவாரஸ்யமாய் உள்ளது. 'தமிழே பொங்கு' கவிதையில் யுத்த சூழலில் மனித மனம் எவ்வாறெல்லாம் பொங்குகின்றதென்பதை வெளிப்படுத்துகிறார். 'ஆற்றங்கரை' கவிதையில் கவித்துவம் செறிந்த கற்பனை வளத்தை தரிசிக்கலாம் 'பண்டார வன்னியனில் வீர உணர்வை வெளிப்படுத்துகிறார்.



எந்த ஒரு கவிஞனும் இலக்கிய வாதியும் தனக்கெதிரே நடப்பவைகளை மறந்து கண்களை மூடிக் கொண்டிருக்க முடியாது. அப்படிப்பட்ட கவிஞன் எவ்வளவுதான் ஆற்றல் மிக்கவனாக இருந்தாலும் வரலாற்றில் வாழப்போவதில்லை.

நெலோமியின் பார்வை எல்லாத் திசைகளிலும் மிகக் கூர்மையாக ஊடுருவியுள்ளது. இயற்கை அனர்த்தங்கள், வாழ்க்கைப் போக்கு, யுத்தக் கொடுமை, சமாதானத் தேவை, விடுதலை, பெண்ணிலைவாதம், மனிதாபிமானம் என்றெல்லாம் விரிந்து செல்கின்றது.

போர்க்காலக் கவிதைகள் இன்று தவிர்க்க முடியாத வகையில் பெருமளவில் எழுதப்படுகின்றன. ''மரணத்துள் வாழ்வோம்'' முதல் ஏராளமான கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. யுத்த களத்திலிருந்து எழுதும் போராளிக் கவிஞர்களும் உள்ளனர்.

''கருகிய போதும் குருதியில் விடுதலைக்
கானமிசைத்ததைப் பாடிடவோ''

என்று மிகவும் அருமையாகவும் ஆழமாகவும் பாடுகிறார். போராட்டக்கவிதைகளில் கவித்துவ வீழ்ச்சி காணப்படுவதாகப் பொதுவாகச் சொல்லப்படுவதுண்டு. அந்தக் குறைபாடு நெலோமியிடம் காணப்படவில்லை.

சமூகப் பொறுப்பும் நேர்மையான வாழ்வும் மனிதாபிமானத்தின் பாற்பட்ட அவசியப்பாட்டை இவர் வலியுறுத்துகின்றார்.

''பொல்லார் கையில்
பொறுப்புக்களை ஏன் கொடுத்தாய்?''

''ஆவி துறப்பினும்
அறத்துக்காய் ஆக வேண்டும்''

என்று இருவேறு கவிதைகளிலே தனது தார்மீக ஆவேசத்தை வெளிப்படுத்துகிறார். கவித்துவம் நிரம்பிய வாசகங்களை ஆங்காங்கே மிக இயல்பாகவும் சரளமாகவும் சொல்லிப் போகின்ற திறமை அலாதியானது. பாதையிலே நின்று நெடு மூச்சுவிடும் தென்னை கொள்ளிகளைக் கொண்டு வந்து மின்மினிகள், காதலை வாழவைக்க கல்லறை தேடிவந்தோம். இவை பதச் சோறாய் சில பருக்கைகள்.

புதுக்கவிதையாகவும் பல கவிதைகள் எழுதியுள்ளார் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழாக உடைத்து எழுதிவிடுவது கவிதையாகி விடுவதில்லை. படிமம், குறியீடு என்பன புதுக்கவிதையின் சிறப்பம்சங்களாகும். நெலோமியின் புதுக்கவிதைகள் இன்னும் வளம் பெற வேண்டும்.

முதலாவது தொகுதி என்ற வகையில் வெற்றி பெற்றுள்ளார் கவிஞர். எதிர்காலத்தில் மேலும் சிறந்து விளங்க முயற்சிக்க வேண்டியது அவசியமாகும். இதற்காக தனது கடந்த காலத்தையும் ஒருமுறை மீள் பார்வை செய்து கொள்வது முக்கியமாகும்.

அவ்வப்போது எழுதியதை பத்திரப்படுத்துவதாகக் குறிப்பிட்டிருந்தாலும் கூட, சமூக அவலங்களால் பாதிக்கப்பட்டு வெளிப்படும் கவிதைகள் அவ்வப்போது பத்திரிகை, சஞ்சிகைகள் வாயிலாக ஆவணமாகவும் வேண்டும்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி தனது படைப்பாற்றலை உறுதிப்படுத்தியுள்ளார். இது ஊக்கம் தரும் நிகழ்வுமாகும். அதற்காக எல்லாக் காலத்திலும் பரிசுக்காகக் கையேந்தும் நிலை வந்து விடக்கூடாது. போட்டி நடத்துபவர்களின் எதிர்பார்ப்புக்குள் படைப்பாற்றல் விலைபோகும் துர்ப்பாக்கியம் நிகழ்ந்து கொண்டிருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறுதியாக நான் ஏன் எழுதுகிறேன் என்ற தெளிவான இலட்சியமும் அதனை நோக்கிய நகர்வும் துல்லியமானதாக இருக்க வேண்டும். எல்லாப் படைப்பினுள்ளும் இந்த உள்ளீடு மிக நுட்பமாக பொதிந்திருக்க வேண்டும்.

இது நெலோமி அன்ரனி குரூசின் ஆரம்பம். நிறைய எழுதி நிறைய வாசித்து, நிறைய விவாதித்து, மிகச் சிறந்த படைப்புக்களை எதிர்காலத்தில் தருவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்துப் பூக்களைத் தூவுகின்றேன்.

**திக்குவல்லை கமால்**
**வலயக் கல்விப் பணிமனை**
**வவுனியா தெற்கு.**
***29.09.2005***



# என் ஆத்மாவிலிருந்து......

கவிதை இலக்கியம் கனமானது. கடினமானது. நூறு கலைஞர்களுள் தரமான கவிஞர் ஒரு சிலரே தோன்றுகின்றனர். நாம் சின்னவயதில் படித்த நிலா நிலா ஓடிவா, நானே நல்ல கந்தன் இவையெல்லாம் இன்றுவரை நெஞ்சோடு நின்று நிலைத்து இன்றும் எமது சந்ததிக்குத் தொடர்ந்து வருகின்றது என்றால் அது கவிதை என்ற அமைப்புக்குள் அமைந்து இருப்பது தான் காரணம். சந்தமும் நயமும் எங்கு சேர்ந்திருக்கின்றதோ அங்கு கவிதை எழுகிறது, வாழ்கிறது.

சந்தம் இல்லை என்பதற்காக இவைகள் கவிதைகளாக இருக்க முடியாது என்று "புதுக்கவிதை எதிர்ப்பு" இயக்கத்தில் நான் இணைந்து கொள்ள விரும்பவில்லை. "மரபுக்கவிதை தண்டவாளத்தில் ஓடும் தங்கரதம், புதுக்கவிதை சிறகடித்துப் பறக்கும் வானம்பாடி" என்ற சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் அவர்களின் கூற்றுக்கு மறுப்பும் இல்லை. ஆனால்..... புதுக்கவிதை என்ற பெயரில் தமிழ்ச் சொல்லை நறுக்கி மேல்கீழாய் எழுதிவிட்டு கவிதை அதுவென்று நினைப்போர் மத்தியில் நானோர் எதிர்ப்பு வாதி. அதேவேளை ஒரு நல்ல மரபுக்கவிதையாளனால் சிறந்த புதுக்கவிதைகளையும் படைக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவளும் கூட.

எழுத்து என்பது மனித உணர்வுகளின் வடிகால் அது சிறுகதையாக, கட்டுரையாக, கவிதையாக இருக்கலாம். ஆனால் கட்டுரை ஒருபோதும் கவிதையாகிவிடமுடியாது. மற்றவர்களுக்கு விளங்காத மரபுக்கவிதைகள் எவ்வாறு ஒதுக்கப்படுகின்றதோ அதுபோலவே விளங்காத புதுக்கவிதையும் ஓரம் கட்டப்படும்.

என்னைப் பொறுத்தவரை நான் ஒரு மரபுக் கவிதையாளர் என்றோ புதுக்கவிதையாளர் என்றோ முத்திரை குத்திக் கொள்ள விரும்பவில்லை. எனது அரங்கக் கவிதைகள் மரபுக் கவிதைகள் அல்ல என்பது எனக்குத் தெரியும். அதற்காக அவை விளங்க முடியாத புதுக்கவிதைகளும் அல்ல. அவை பார்வையாளர்களைக் கவரும் நோக்கில் மரபு தழுவிய உரைநடைப் பாங்கில் அமைந்துள்ளன. என்ன இருந்தாலும் எனது கவிக்குழந்தைகளை நான் நேசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தந்த பருவ வயதில் என்னைத் தாக்கிய அழுகை, கோபம், இன்பம், காதல், ஆற்றாமை, உணர்வுகளெல்லாம் எழுத்துக்களாக வடிவம் பெற்றன. எனது உணர்வுகளுக்கு வடிகாலாக என்னை ஆற்றுப்படுத்த, ஆறுதல்படுத்த அவற்றை எழுதினேனே தவிர அவை புதுக்கவிதையா? மரபுக்கவிதையா என்பது பற்றியெல்லாம் நான் சிந்திக்கவேயில்லை. எழுதி முடிந்ததும் எனது மனச்சுமை குறைந்து அவை கவிதையில் உயிர் பெற்றதை உணர்ந்த படியால் அக்கவிதைகளை என் உணர்வுகளைப் போலவே பத்திரப்படுத்தினேன். யாருடைய பார்வைக்கும் விட்டுவிடாமல் பாதுகாத்தேன்.

என் பள்ளிப் பருவத்தில் எழுதிய கவிதைகள் சிறுபிள்ளைத் தனமாகவும் சில புதுக்கவிதைகள் தற்போது எனது பார்வையில் கவிதைகள் என்று ஏற்க முடியாதவைகளாகவும் உள்ளன. அவற்றை இந்நூலிலிருந்து நீக்கிவிடட்டுமா? என்று எனது தகப்பனிடம் ஆலோசனை கேட்ட போது பரவாயில்லை அந்த வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டவைதானே இருக்கட்டும் என்றார். அவரது கூற்றுப்படி எனது இளமைப் பருவ அனுபவங்கள் உங்கள் முன் ஒளிவு மறைவின்றிக் கிடக்கின்றன.

எனது கவிதைகள் எனக்குள்ளேயே வாசிக்கப்பட்டு என்னுடனேயே மௌனித்துக் கொண்டு இருந்தன. எனக்கு மட்டுமே கேட்ட மௌனப் பாட்டுக்களைப் பேச வைக்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டியவர் எனது தகப்பன்.

பதினைந்து வயதுச் சிறுமியாக இருந்தபோது எழுதிய சூரியன் என்ற கவிதையை பிறரிடம் சொல்லி எனது தந்தை பாராட்டினார் என்பதற்காகவே அதனைப் பெறுமதியாக நினைத்துப் பத்திரப்படுத்தினேன்.

எனது தந்தைக்கு அடுத்தபடியாக மறைந்தும் மறையாமல் வாழ்கின்ற சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் அவர்கள் கையெழுத்திட்டுத் தந்த "வித்துவ விரல்களில் சிலந்தி வலை பின்னாதிருக்கட்டும்" என்ற வாசகத்தை நினைக்கும் போதெல்லாம் இன்றும் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகின்றது.

எழுதுவதில் எனக்கிருந்த துணிவு அதைப் பகிரங்கப்படுத்துவதில் பூச்சியமாக இருந்தது. பள்ளிப்பருவத்திலும், பல்கலைக் கழகத்திலும் மேடைக்கூச்சம் இருந்து கொண்டே இருந்தது. எனது இந்த தாழ்வு மனப்பான்மையால் ஏராளமான சந்தர்ப்பங்களைத் தவற விட்டுள்ளேன்.

ஆனால் மாணவப் பருவம் கடந்து ஆசிரியர் என்ற தகுதி வந்தபோது மெல்ல மெல்ல சிறு முளையாக தலைகாட்டத் தொடங்கினேன். இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய போது சந்தர்ப்பங்களைத் தேடித் தேடி எனக்குத் தந்து என் கவிதைகளுக்கு களம் அமைத்துத் தந்து உற்சாகமூட்டிய அருட்சகோதரி மேரி யூட்மடுத்தீன் அவர்கள் நான் மறக்கக் கூடாதவர்.



இக்கவிதைத் தொகுப்பில் எனது இளமைப் பருவக் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ஓரளவு அனுபவத்தில் முன்னேறிய தற்போதையவயதுப் பருவத்தில், அன்று நான் எழுதியவையெல்லாம் சிறு பிள்ளைத் தனமான கிறுக்கல்களாகப்படுகின்றன. ஆனாலும் அந்தந்த வயதுப் பருவ மனச் சிதறல்களை தற்போதைய மனநிலையில் மாற்றிப் புடமிட்டுத் தருவதில் எனக்குச் சம்மதமில்லை. உள்ளதை உள்ளபடி மாற்றமேதும் செய்யாமல் அப்படியே தந்துள்ளேன். ஒரு சின்னக் குழந்தை தத்தித் தத்தி நடந்து முன்னேறுவதைப் பார்க்கின்ற சந்தோஷம் அக்கவிதைகளைப் படிப்பதில் எனக்கு ஏற்படுகிறது.

பெருங்கவிஞர்கள் மத்தியில் கன்றுக் குட்டியாக நிற்கும் எனக்கு எப்போதும் உற்சாகமூட்டி எனது வளர்ச்சியில் அக்கறை காட்டி அரவணைக்கின்ற எனது அருமைப் பப்பா, அம்மா. என்னால் இயலாது என்று அடம்பிடிக்கும் போதெல்லாம் இயலும் என வற்புறுத்தி அனைத்திலும் பங்களிக்க வைத்து மகிழும் என் அன்புக் கணவன் இவர்கள் எல்லோருமே எனக்கு பக்கபலமாக நிற்பவர்கள்.

எனது கவிதைகள் பொருளாதாரச் சுழலில் சிக்கி மறைந்து போய் விடுமோ என்று கலங்கிய வேளையில் கைகொடுத்து உதவி செம்மையாகப் பதிப்பித்துத் தந்த மல்ரிவிஷன் அச்சக உரிமையாளர் திரு க.ரணேஷ அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும் எனது நன்றிக்கு உரியவர்கள்.

இன்னும் எனது கவிதைக்குழந்தைகளைப் பாராட்டி, கண்டித்து வளர்க்க முயலுகின்ற அனைத்து இதயங்களும் என் அன்புக்கு உரியவர்களே.

எனது உணர்வுக்குவியல்களை உங்கள் முன் சமர்ப்பித்துள்ளேன். அதை ஏற்பதும், மிதிப்பதும் உங்கள் கைகளில்.

**-நூலாசிரியர்-**
**நெலோமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


பக்கம்

01. அரங்கில் இசைத்தவை

இராகம்

1. கடல் காவு தந்த கண்ணீர்கள் 02
2. ஆற்றங்கரை ஓரத்தில் ஓர் இரவு 08
3. ஐந்து மணியச்சா ஐயய்யோ சரியாச்சு 18
4. அன்புள்ள நுளம்பாரே 23
5. புயலடித்து ஓய்ந்தது புதுவாழ்வு மலர்ந்தது 27
6. போதை தரும் தீது 37
7. தமிழே பொங்கு 41
8. பண்டார வன்னியனைக் கொண்டாடும்நாளின்று 47
9. வெல்வார் என்பது வெளிப்படை 50
10. விடியும் என்று காத்திருந்தோம் 52

02. அகத்தில் இனித்தவை

1. எங்கள் தமிழ் 56
2 இது நடக்குமா? 58
3. மெல்லத் தமிழ் இனிச் சாகாது. 59
4. என் உயிரே 61
5. ஆசிரியர் 63
6. சூரியன் 65
7. பதினாறு வயதில் 66
8. பறவைகள் நினைவுகள் 67
9. இறைவா நீ எங்கே 68
10. தமிழன்னை விடுகின்ற கண்ணீரை துடைக்காரா? 70
11. சோதரராய் வாழ்ந்திடுங்கள் 72
12. சாற்றுவோம் நாமெல்லாம் ஏற்றமிகு தமிழரென்று 73
13. தாய்க்குலமே ஜாக்கிரதை 75
14. தூக்கமே தொலைந்துபோ 77
15. குறுஞ்சி வாழ்வு 79
16. பெண் 81
17. சரிதானோ 82
18. கல்வி 84
19. மனமே வென்றுவிடு 85
20. பெற்றமனம் 86
21. வாழ்த்துக்கள் நண்பா 87
22. பெண்ணே பெண்ணே 89
23. ஒன்றுமில்லை 90
24. தனிவழி 91
25. மழை 93
26. எழுவாய் 94
27. மீண்டும் பிலாக்கணம் 95
28. நிலையாமை 96
29. ஏக்கம் 97
30. மாற்றுவழி இல்லையோ 98
31. ஆசைக்கனவு 100
32. சின்னக் குருவியே 101
33. இறை(யே) வா 102
34. கருமுகிலுக்கு 103





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கில் இசைத்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் காவு தந்த கண்ணீர்கள்



கரங்களைக் கட்டி
கைதட்டு என்றார் கழுத்துச்
சுருக்கோடு வைரச்
சுரங்கத்துள் விட்டார்
விருந்துக்கு அழைத்து
வாய்பார்க்க வைத்தார் - இவ்
அரங்கத்தைத்தந்து
கவிபாடு என்றார்

கடல்காவு கொண்ட
கண்ணீரைப் பாடென்றால்
இடம் இங்கு ஏனையா
இதயமே ஏதையா?
சடங்களாய் மாறிச்
சரித்திரம் கூறும்
உளங்களே போதும்
உண்மைகள் நீளும்

அரையாண்டு ஆனபின்பும்
ஆறியதா எம்முள்ளம்?
கரை தாண்டி வந்தஅந்த
கதை ஓய்ந்து போனதோ?
திரை என்று பெயர் கொண்டு
மாதர் உடல்
திரைகிழித்துக் கேவலமாய்
தரை மீது வீசிய அத்
தருணங்கள் மாறியதோ
தொடராகித் தொடரான
துயரங்கள் போயினவோ

அலை எழுந்து நிலைகுலைத்த
அவலம் தன்னைப் பாடவா?
கலையிழந்த எங்கள் பெண்கள்



கவலை தன்னைக் கூறவா?
விலையில்லாத உயிரிழந்த
வியாகுலத்தைச் சொல்லவா?
இலையே இனி நாதி என்ற
ஏக்கம் தன்னைச் செப்பவா?

இந்தக்கடல் சொந்தக்கடல்
தந்த துயர் இதுவோ?
விந்தைக் கொலை நிந்தைகளை
நெடிய கடல் தருமோ?
சிந்தாகுலம் எந்தாய்க்குலம்
சிந்தும் விழி சொலவோ
பந்தாகிய எந்தாயகம்
பதறும் கதை சொல்லவோ?

முன்னொரு காலத்தில்
முழங்கிய வாரியின்
இன்னொலி கேட்டு
எழுந்தன கவிகள்
முச்சங்க காலத்தும்
மூவேந்தர் காலத்தும்
எச்சங்க காலத்தும்
எழுந்தன கலைகள்
அச்சாக் கடல் என்று
அவர் பாடி வைக்க
எச்சங்கள் இல்லாமல்
எடுத்தோடிச் சென்றாய்
தமிழ்
சங்கத்தை கடல் உண்ட
சரித்திரம் சொன்னார்-கடல்
சங்கரித்த கோலத்தின்
சரித்திரமாய் நின்றோம்

அன்னையும் தந்தையும்
அள்ளுண்டு போனார்
அக்காவும் தம்பியும்
அலறியே போனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாதே ஓடு
என்றவர் போனார்
ஓடாமல் நின்றோரும்
ஓலமாய் ஆனார்
பச்சிளம் பாலகர்
பாவையர் ஆடவர்
உச்சிய அலையுள்
உயிருடன் போனார்
அச்சத்தில் அலறி
அலையோடு போராடி
எச்சமே இல்லாது
எல்லோரும் போனார்

கும்பிட்ட கோவில்
கடலுடன் போனது
கூடங்கள் மாடங்கள்
கூழமாய் ஆனது
அம்பிட்ட பொருட்கள்
ஆழியுள் போனது
ஆயிரம் ஆயிரம்
அழிவுகள் ஆனது

ஆழியே நீயொருகால்
தோழியாய் இருந்தவள்
தொட்டிலாகி எமையெல்லாம்
தாலாட்டி வந்தவள்
வேலியே பயிர் மேய்ந்த
வேதனை செய்தனை
வாலிபத் திமிர் கொண்டா
வஞ்சனை புரிந்தனை?

அரை நொடியில் எல்லாமே
அடியோடு போனதே
அரையாண்டு ஆனபின்னும்
எம்கண்ணீர் போனதோ?
கடல்தந்த கண்ணீர்
கரை இன்றிப் பாயும்



விழிமூட இயலாது
கலக்கங்கள் தோன்றும்
பித்தராய் பேதையாய் புலம்புவோர்
பேயறைந்தாரெனப் பிதற்றுவோர்
தற்கொலை செய்துயிர் போக்குவோர்
எத்தனை துயரம் தீருமா?

பனையால் விழுந்தவனை
மாடேறி மிதித்தது போல்
அகதி முகாம்கள்
அவலங்கள் ஒன்றா?
பிள்ளையைச் சாட்டிப்
பூதங்கள் உண்ணும்
பூச்சாண்டி காட்டிப்
பறிக்கின்ற கூட்டம்
சுனாமி என்றோதிச்
செய்கின்ற சுரண்டல்
எல்லாமே கடல் தந்த
கண்ணீரின் கோலங்கள்

எம் நேசக் கடலே
பாதகம் செய்தாலும்
பாகுபாடு உனக்கில்லை
பரவை உனக்குள்ளே
பகுப்பாய்வு துளி இல்லை
இங்கு
பகுத்தறிவாளராய்
பகட்டியே நிற்பார்
புத்தனை போ என்று
புறம் தள்ளி வைப்பார்
பிள்ளையார் தனை அள்ளிப்
பற்றையுள் வைப்பார்
சிலுவையைப் பிடுங்கி
அப்பாலே வைப்பார்
அல்லாவா இங்கு
முன்னணி என்பார்
எத்தனைப் போலிங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேதோ செய்வார்
ஏமாந்தோர் மேலேறி
இருக்கவும் செய்வார்
நாளும் நாளும் நீளும் கொலைகள்
மனிதனை மனிதன்
அழிப்பது கண்டோ
மாகடல் பொங்கி
எழுந்தனை அம்மா

கண்ணீர் தந்த காவியங்கள்
கடலால் மட்டும் வந்ததா?
மண்ணில் இந்த மானிடர்கள்
மமதையாலும் வருகுதே
புண்ணில் வேலை பாய்ச்சல் போல
புரிகின்றாரே தீமைகள்
எண்ணில்லாத வேதனைகள்
எண்ண எண்ணப் பெருகுதே

சாதி என்ற பேதம் காட்டும்
சண்டைகளால் கண்ணீர்
நீதி நெறி கொன்றவர்கள்
நிந்தைகளால் கண்ணீர்
வேதம் ஒரு நூறு சொல்லும்
வேதனையால் கண்ணீர்
சாதனைக்கு வக்கில்லாத -சதி
காரராலே கண்ணீர்

நடுநிலைக்கு வந்தவர்கள்
நடத்தைகளால் கண்ணீர்
படுகொலைக்கு அஞ்சிடாத
பாவிகளால் கண்ணீர்
பக்கச்சார்பு உள்ளவர்கள்
பாதகரால் கண்ணீர்
பாடுபட்டு உழைப்பவர்கள்
பலனில்லாத கண்ணீர்

சாதிச்சண்டை சமயச்சண்டை
மோதுவதால் கண்ணீர்



பெரும்பான்மை சிறுபான்மை
பேதங்களால் கண்ணீர்
இனமென்றும் மொழி என்றும் -இந்
நாட்டவர்கள் கண்ணீர்
தினம் நூறு சண்டைகளால்
தீராத கண்ணீர்

பணமுள்ளோன் ஏழை என்ற
பாகுபாட்டுக் கண்ணீர்
யேசு புத்தர் சைவர் நபி
என்றும் இங்கு கண்ணீர்
மனம் மாற்றம் இல்லையெனில்
மாறாத கண்ணீர்
சுனாமியின் கண்ணீர் என்ன
இதை விடவா கண்ணீர்?

மண்மீது மகிழ்வெய்த
மறைய வேண்டும் கண்ணீர்
எப்போதும் கண்ணீர் தான்
எம் தலையின் எழுத்தோ
எரிகின்ற நெருப்பில்
எண்ணையாய்த் துயரோ
எப்படி இதை நாம் பொறுப்போம்
எங்களின் தலைவிதி மறுப்போம்

பாசம் அன்பு உரைத்து எங்கும்
பரவிடட்டும் கண்ணீர்
பண்பு கொண்டு மனிதர் வாழ
பலுகட்டும் இக்கண்ணீர்
துன்பியலைத் தருகின்ற
கண்ணீர்கள் வேண்டாம்
அன்புறவு வேண்டும்
அகிம்சைவாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆற்றங்கரையோரத்தில் ஓர் இரவு

பல்கால நண்பன் பக்கத்து ஊரில்
பார்ப்பதற்குச் சென்று பலசோலி பேசி என்
பொல்லாத நேரம் பொழுதாகிப் போச்சு
பொன்னாகப் பூமி நிறம் மாறலாச்சு
கல்லாற்றுப் பாலம் கடந்தாக வேண்டும்
கனதூரம் அப்பால் பறந்தாக வேண்டும்
செல்லாதே என்று சகதோழன் சொல்ல
சேர்வேனே என்று செருக்கோடு வந்தேன்

பாட்டனார் தந்த பல காலச் சொத்து
பாங்காக எந்தை பாவித்த வண்டி
பூட்டேதும் இல்லாத பழசான வண்டி
பாதைக்கு ஏற்ற பதமான வண்டி
காட்டமாய் ஏறிக் குந்தினேன்
கால்களால் அழுத்தி உந்தினேன் தன்
பாட்டிலே அதுவும் போகுதே என்
பாதையில் பாட்டுத் தோன்றுதே
(வேறு)



சில்லென்று வீசுகின்ற தென்றலொடு பேசும்
செம்பவளச் சிறுகுருவி சேர்ந்து இசைபாடும்
நில்லென்று விழிநிறுத்தி மோகனங்கள் காட்டும்
நாயகியாள் போல வயல் நளினங்கள் கூட்டும்
மல்லொன்று செய்து அங்கு மறைந்தோடும் மந்தி
மதுவுண்ட மயக்கத்தில் இரைகின்ற வண்டு
உல்லாசப் பொழுதாக இனிக்கின்ற வேளை
உயிரோடு எனைவாட்டி வதைக்கின்ற மாலை

பச்சைவயல் சூழஎங்கும் பசுமையான காட்சி
பாதையிலே நின்று நெடு மூச்சுவிடும் தென்னை
இச்சை கொண்டு வான்மகளை முத்தமிட்டதாரு?
இப்படியோர் நாணம் வந்து படுகிறதே பாடு
நச்சு என்று கத்துகின்ற அணிலுருண்டு ஓடும்
நாகரீகம் இன்றி நடு வீதியிலே பாயும்
உச்சியோடும் உடும்பிருந்து ஒரு புறமாயோடும்
ஊமையாகப் பாறையொன்று உறுத்துவிழி பார்க்கும்

பூங்குருவி மாங்குருவி மயில்களொடு கொஞ்சும்
மங்களமாய் ஒலியெழுப்பி மாயவித்தை செய்யும்
தேன்குழலின் நாதமென தித்திக்கும் ஓசை
தீங்கனியின் சாறுசிந்தித் திகழுகின்ற பூமி
ஓங்குபுகழ் ஒன்றல்ல இரண்டல்ல சொல்ல
ஒண்தமிழில் தேடுகிறேன் வார்த்தைகளே இல்லை
வேய்ங்குழலின் ஒலிபோல வீசுகின்ற தென்றல்
வேத ஒலி நாத ஒலி மந்திரமாய் கேட்கும்

அந்தி மகள் அழிவானக் கட்டிலுக்குப் போனாள்
அலங்கார இருளாடை அணிந்துறங்கலானாள்
மந்தகாசப் புன்னகையில் மங்கையவள் வந்தாள்
மாயமென்ன முழுமதியாள் முகமலர்ந்து நின்றாள்
விந்தையான வெள்ளியாடை விளக்கெரிய வந்தாள்
வீசுகின்ற தென்றலினை துணையெனவே கொண்டாள்
அந்த நேரம் அமைதியிலே இப்படியோர் சோகம் என்
உந்துருளி ஜீவனின்றி நின்று விட்ட கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லொன்று இருந்திருந்து குத்தியது போலும்
காற்றுப்போய் என்குதிரை நிற்கிறதே பாவம்
அல் இந்த நேரத்தில் உதவிடுவோர் இல்லை
ஆண்டவனே என்ன இது இப்படியோர் தொல்லை
மெல்லென்று நடக்கின்றேன் என் விதியை நொந்து
மேல்மூச்சு கீழ்மூச்சு வியர்வையொடு சிந்தும்
பொல்லாத கற்பனைகள் நெஞ்சோடு ஆச்சு
ஏகாந்த வேளையிலே என்கதியோ போச்சு

வெள்ளிமகள் பல்லிளித்துப் பரிகசித்தாள்
வேணுமடா உந்தனுக்கு இன்னுமென
அள்ளிவரும் மல்லிகையின் வாசமெல்லாம்
ஐயோடா பாவமென அரவணைக்கும்
கொள்ளிகளைக் கொண்டுவந்து மின்மினிகள்
கூப்பிடுதோ எந்தனுக்கு துணைவரவோ
கள்ளிமகள் கலகலத்து ஓடுகின்ற
வெள்ளி ஓடை வந்துவிடு என்றழைக்கும்

(வேறு)

கால்வலி நடையைப் பின்ன
களைப்பினில் வியர்வை பொங்க
மேல்வலி இல்லா எந்தன்
மேனியும் சோர்வு காண
வாலிபக் கன்னி ஆறு
வாவென அழைக்கும் ஓசை
பாலிய தோழி அவளின்
பக்கலில் சென்றேன் அங்கு

கல்லாற்றுக் கன்னி கலகலப்பாள்
கவிதைகள் பலநூறு வரவழைப்பாள்
பொல்லாத வேளை பொன்னென்று ஆச்சு
பலதான சோகம் காற்றொடு போச்சு என்
இல்லாளும் இருந்தால் இனிதாகும் அவள்
இல்லாத நிலவு இருளாகும்
மல்லாந்து ஆங்கோர் கல்மீது சாய
மாயங்கள் கூடும் மயக்கங்கள் ஆச்சு



(வேறு)

இடையசைந்து நடையசைந்து
நர்த்தனங்களோடு
நாணுகிறாள் கோணுகிறாள்
நளின நயங் காட்டி
மடைதிறந்து ஓடுகிறாள்
மன்னவனைத் தேடி
கடலவனும் கரையுடைத்து
கடந்த கதை கேட்க

கருயானைப் பாறைகளின்
கனமுதுகில் ஏற
எழுகின்ற நுரை தள்ளி
விழுகின்ற நீரே
பரிகாசம் செய்தோடிப்
பயங்காட்டி எங்கும்
பாய்கின்ற பண்புக்கு
பரிசாமோ கூறு

பச்சைக் கரைச் சேலை
பகட்டாக அணிந்து
பார்ப்போரின் கண்களுக்கு
பரவசமோ கோடி
பிச்சைக் கோலம் உன்
பக்கலிலே இல்லை
பார்க்கின்ற இடமெங்கும்
பசுமரங்கள் சோலை

பாலூற்றிச் சொரிகின்ற
பவள நிலாப் பொட்டை
பறித்து இந்த நீர்மகளும்
இட்ட கதை பாரு
காலூன்றி நிற்கின்ற
காவல் இவை கொக்கோ?
ஐய்யோ அல்ல இவை
அழகு மலர் ஆம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணின்று வீழ்ந்துவிட்ட
வெள்ளிகளோ இந்த
விளையாட்டுப் போதுமென
துள்ளுவதைப் போல
தண்ணென்ற நீரில் விளை
யாடுகின்ற மீன்கள்
தாவுகின்ற நீந்துகின்ற
துடினங்களோ கோடி

பெண்ணழகே உன்னழகுப்
பேரழகுப் புதையல்
பெருமையிலே நீ புரியும்
புன்னகையும் நன்றே
கண்களிலே காதலுடன்
கலகலத்துப் போகும்
கல்லாறே என்மனதில்
கனக்கிறதே சோகம்

அன்னநடை அழகுநடை
அணி வகுத்துப் போகும்
கன்னலுக்கு நீரூட்டி
வயல்வெளியே ஓடி
மின்னலிடைப் பாவையரின்
மேனியெழில் பார்த்தும்
இன்னமுதமாயினிக்கும்
இனியவளே கேளு

முன்னமொரு நாளிருக்கும்
முடிந்து போன காலம்
பன்னெடிய காலம் முதல்
பயணிகளை ஆற்றி
உன்னருவிக் குளிராலே
அயர்வு தனைப் போக்கி
அன்னையெனக் காட்டியது
அவலமாகி இன்று

தண்ணீரைக் கண்ட மனம்
தறிகெட்டு ஓடும்



தாழாத வடுவொன்று
தான் தோன்றிப் போச்சே
மண்மீது நாம் கண்ட
மரணங்கள் ஒன்றா?
மாறாத வடுவாகி
மறையாது தாயே

வாரி எனும் வடிவழகன்
வாய்த்தவனோ உந்தன்
வாழ்வினுக்கும் இறுதிகாண
விரைபவளே கேளு அவன்
ஊரினையே அழித்த கதை
உலகறியும் கண்டாய்
உயிர்குடித்து உருக்குலைத்து
உறிஞ்சியதேன் கேளு

கற்பனைக்கு எட்டாத
கவலைகளைத் தந்து
கடலாளன் கரம்நீட்டிக்
கரைகளையே தின்றான்
அற்பனாகி அடிமை கொண்டு
ஆக்கினைகள் செய்தான்
அலறி ஓட அலை வீசி
அள்ளி அள்ளி கொண்டான்

ஆடைகளை கிழித்தவனும்
அம்மணமாய் விட்டான்
ஆடவரும் அரிவையரும்
அலங்கோலம் ஆனார்
ஓட ஓட ஓடி வந்து
ஒரு கொலையா செய்தான்
ஒரு நொடியில் ஆயிரமாம்
உயிர்களையே உண்டான்

ஊழி நடம் ஆடி விட்டான்
உன்கணவன் அந்தோ
உருக்குலைந்து போயிருக்கும்
உயிரினங்கள் பார் பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழியவன் இப்படியோர்
பேரழிவு செய்ய
அடிமனதில் ஏதோவோர்
அனலிருக்க வேண்டும்

வாழ்விடங்கள் வாழ்விக்க
வாய்த்தவளே நீயோர்
வண்ணமகள் வாயார
வாழ்த்துகிறோம் உன்னை
கேள்வியொன்று கேட்டுவிடு
கடலரசன் தன்னை
கேவலமாய் ஆனதற்கு
என்ன குறை செய்தோம்?

மந்தியொன்று மரந்தாவிக்
கலகலத்த வேளை என்
சிந்தனையாம் சிறகொடித்து
சுயநிலையில் மாற
முந்தும் ஒரு எண்ணமுடன்
முனைந்தெழுந்த வேளை
ஊசலாட்டம் ஒன்றாட
உற்று உற்றுப் பார்த்தேன்

(வேறு)

கன்னி ஒருத்தி கவினழகு கொண்டாள்
கற்பனைக்கு எட்டாத பேரழகு கொண்டாள்
மின்னலிடை காட்டி மெல்லெனவே வந்தாள்
மேகக் கூந்தலிடை முழுமதியாய் நின்றாள்
கன்னக் கருங்கூந்தல் காற்றோடு ஆட
கவிதை பல கோடி நெஞ்சோடு ஊற
சின்ன இடை நூறு நடனங்கள் கூற
அன்ன நடையாகி அடிவைத்து வந்தாள்

(வேறு)

சோகமாய் நின்றிருந்தாள் -விழி
சோரும் நீரருவி
பாகாய் உருகி நின்றாள் -வாய்
பல கதை பேசுகிறாள்



பாவமாய் இருக்கிறதே -என
பலதும் எண்ணுகையில்
வேகமாய் ஒருருவம் -வந்து
அன்பே என்றழைக்கும்

பார்த்தாள் பரவசமாய் -கண்ணா
பதைத்தேன் என்றழுவாள்
வேர்த்தாள் விறுவிறுத்தாள் -அன்பே
வேண்டும் நீ என்றாள்
கோர்த்தாள் விழி நீரை -அவன்
கரங்கள் விரிந்தேங்க
பூத்தாள் புதுப் பூவாய் -அவன்
மார்பில் பூங் கொத்தாய்

(வேறு)

கட்டி அணைத்துக் கண்ணீரும் விட்டு
கவிதை இதழ் மீது கனமுத்தம் தந்து
கட்டிக் கரும்பே நாம் கனநேரம் இல்லை
காதல் இது எங்கள் வாழ்வுக்கு எல்லை
வெட்டும் ஏச்சுக்கள் காயங்கள் போதும்
வேகாமல் வெந்தோமே இன்றோடு மாறும்
கொட்டும் மேளங்கள் கச்சேரி இல்லை
காதல் சிட்டுக்கள் நாம் சேர்ந்து போவோம்

சங்கீதம் பாடும் அருவியிவள் எம்மை
சீ என்று கூறித் தள்ளிவிட மாட்டாள்
எங்கேயும் சேர்ந்து வாழ விடமாட்டார்
ஏந்திழையே இப்போது நாம் சேர்ந்து போவோம்
பொங்கிவரும் நீரில் பாயுமெண்ணம் கொண்டு
பேதலித்து உள்ளம் பேச்சிழந்து நின்று
தங்கரத்தைச் சேர்த்து சடுதியாகப் பற்றி
தாம் நடந்து செல்ல பாய்ந்தெழுத்து சென்றேன்

ஆரடா அங்கே என்று
அதட்டினேன் சத்தம் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரடி வைத்தார் பின்னே
ஒதுங்கியே நின்றார் சற்று
நீரடை கண்ணால் என்னை
நிமிர்ந்தவர் பார்த்தார் நொந்து
சோரடை உள்ளம் கொண்டு
சோகமே உருவாய் நின்றார்

சாவதற்கு வந்தோம் ஐயா
சடுதியில் வந்தீர் ஐயா
போகிடப் போறோம் ஐயா
போக்கிடம் தடுக்காதீர்கள்
நோவது பட்டோம் இங்கு
நொந்துளம் கெட்டோம் ஐயா
சாவது ஒன்றே எங்கள்
சங்கமம் ஆகும் என்றார்

சாதியும் பணமும் என்ற
சாக்கடை வந்ததாலே
மோதியே செத்தார் எங்கள்
மார்பிலே தீயை வைத்தார்
வேதனை அதனால் ஐயா
வேறிலை வழியும் எங்கள்
காதலை வாழ வைக்க
கல்லறை தேடி வந்தோம்

ஆதலால் செத்தீர் ஆகில்
அவலங்கள் யாவும் முற்றோ
ஈதொரு முடிவால் இந்த
இம்சைகள் அழிந்து போமோ
சோதனை எது என்றாலும்
சோர்ந்திடல் இன்றி வாழ்வில்
சாதனை செய்தல் நன்றோ?
சாவது மிகவும் நன்றோ?

வாழ்க்கையே வாழத்தானே
வாழ்ந்தது போதும் என்கில்
கீழ்ச் செயல் அன்றோ இந்த



கேவலம் புரிந்தால் அம்மா
வீழ்தலில் எழுதல் நன்று
வீறுடன் வாழ்வோம் என்று
தூளுரை கொண்டால் வெற்றி
தூழுதல் உண்மை அன்றோ

சாதியும் பணமும் இப்போ
செத்திடத் தூண்டும் உம்மை
போதிய காலம் செல்ல
போகிடும் கோழை எண்ணம்
மேதினி மீதில் நீங்கள்
மேன்மையில் வென்று நின்றால்
பீதிகள் இல்லை உங்கள்
புன்னகை காதல் வெல்லும்

நன்றிகள் கூறிப் போனார்
நலம் பெற வாழ்த்திப் போனார்
வென்றிகள் பெற்றேன் யானும்
வீறுடன் வீடு நோக்க
சென்றுவா மகனே என்று
செப்புவள் போல ஆற்றுப்
பொன்திணி படுக்கை கூறும்
போகிட மனமா ஏறும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்து மணியாச்சா ஐயய்யோ சரியாச்சு

ஐந்து மணியாச்சா
ஐயய்யோ சரியாச்சு
பந்து வேகத்தில் சுற்றிச் சுழன்றாடி
ஐந்தாறு கறியாக்கி
அடுப்போடு போராடி
வெந்து வெளிவந்து
வேலைகள் முடிவாக
அந்தோ ஏழாச்சு
எப்படியோ "ரைம்" ஆச்சு
இதற்குள்
கத்திக் குழறி குட்டுகளும் விட்டு
சுட்டிப் பிள்ளைகளின்
பல்விளக்கிப் பாலூட்டி
பெட்டிக்குள் பென்சில்
பேனையெல்லாம் பார்த்து
கொட்டிக்கிடக்கின்ற
ஒரு கூடை உடுப்புக்குள்
எப்படியோ தேடி
ஏதோவாய் வெளிக்கிட்டு
அப்பாடா என்று
அரங்கேற்றம் செய்ய



"ஒட்டு வேலைக்குப் பசைவேணும் அம்மா
ஒரு கட்டு ஓலையும் தரவேணும்"
குட்டி மகள் நிற்பாள் ஒருகாலில்
அப்போது தான் வந்த நினைவோடு
எட்டிக் குட்டொன்று
வைக்க மனம் எண்ணும்
ஆனாலும் என் விதியை
நொந்து மனம் விம்மும்

எப்படியோ ஒப்பேற்றி
அலைமோதி ஓட
ஏழரையும் ஆச்சு
என்னுயிரும் போச்சு
வைத்த இடத்தினிலே
வைத்ததுகள் இருக்கிறதா?
கத்தித்தான் என்னபயன்
கனநேரம் போச்சு

கொண்டையிடும் கிளிப் எங்கே?
தலையிழுத்த சீப்பெங்கே?
மண்டையிலே ஏதுமில்லை
மனிதர்களா இங்கிருப்பார்
கையிலே வந்தவற்றை
வகையாகச் சுற்றி கைப்
பையைப் காணோமே
கன நேரம் தேடி
காலணியில் ஒன்று
கிணற்றடியில் கண்டு
போதுமடா சாமி என
புறப்பட்ட வேளையிலே
எட்டடித்து இருநிமிடம்
எப்படியோ போச்சு

எட்டி நடந்து ஓட்டமாய் ஓட அங்கு
"றெட்"டாலே கோடடித்து
விட்டிருப்பார் அதிபர்
பொட்டெங்கே நெற்றியிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பேரும் கேட்பார்
ஓ..... மறதிக்கு மருந்துண்டா?
மறுகேள்வி கேட்பேன்

எந்திரமாய் படியேறி
ஏற்றதெல்லாம் செய்து
மந்திரமாய் கல்வியினை
மனம் போல சொல்லி
தந்திரமாய் பேசியதும்
தணியாத போது
தொந்தரவு என்றெண்ணி
தொய்ந்தழுத போதும்
நிந்தனை தான் ஓய்வில்லா
நிஸ்டூர வேதனை

கத்திப் பேசி மூச்சிரையும்
கண்ணிருண்டு காது கூட
பஞ்சடைத்துப் போகும் இங்கு
தப்பிப்பிழைத்து தன் வீடு போக
அங்கு........
மூக்கொழுக என்பிள்ளை
வாசலிலே நிற்பான்
தூக்கென்று தன்கையை
தோள் மீது வைப்பான்
அந்தப் பிஞ்சு வயிறு
ஒட்டி உலர்ந்து ஓ..........
என் நெஞ்சு வெடித்து.........

தாயூட்டி உண்கின்ற
குஞ்சன்றோ அவன்
நோயூட்டி வாழ்கின்ற
வாழ்வென்ன வாழ்வோ

பிச்சைக் காசிற்காய்
பேயாய் அலைமோதி
மிச்சம் ஏதையா?
மிஞ்சும் துயரம் தான் என்



பச்சைக்குழந்தைக்குப்
பாசம் உண்டாமோ?அதன்
குச்சுக் கைகால்க்கு
ஊட்டம் உண்டாமோ?
மெத்தப் படித்தென்ன
மேன்மை பெற்றென்ன
முத்துப் பிள்ளைக்கு
கற்றுத் தந்தேனா?

ஆசிரியக் கடமையிலே
அடியோடு மூழ்கி
பேசரிய தாயன்பை
பறிபோக விட்டு
கூசி நொந்து
தலை குனிந்து நின்று
தேசிழந்து என்வாழ்வு
தேய்பிறையாய் ஆகும்

ஏதேதோ சிந்தனைகள்
ஆனாலும் வீட்டு
வாசலிலே விருந்தாளி
வந்திருப்பார் அவரோடு
பேசி கோப்பி போட
பின்னேரம் ஆகும்

பிள்ளைகளைக் கழுவி
புழுதியாடை துடைத்து
துள்ளுகின்ற கிள்ளுகின்ற
துன்பமெலாம் ஏற்று
நல்ல பிள்ளை என்று
நாலுவாய் ஊட்டி
குட்டிக்கதை சொல்லி
கண்ணுறங்க வைத்து
கட்டுப் பேப்பர்களை
கையெடுத்து ஓயாது
கொட்டக் கொட்டக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டானாய் விழித்திருந்து
கால்கழுவி, கண்கழுவி
கண்ணுறக்கம் போக்கி
கெட்டித்தனமாய்
அத்தனையும் திருத்தி
அப்பாடா என்ன
இரண்டு மணி ஆச்சு

கொட்டும் ஒளி சிந்தும்
பால் நிலவு பார்க்கும்
தொட்டுத் தழுவி தாலாட்டுப் பாடி
நித்திரை தேவி கண் மூடவைக்க
"இன்றும்
பட்டினியா நான்" என்று
கட்டியவன் கேட்க
வெட்டிக் கொல்கின்ற
வெஞ்சினமாய் ஆகி
வார்த்தைச் சவுக்காலே
வசைபாடி நோக
வெம்பி அழுதவிழி
பொழியும் விழி ஆகி
பேசரிய துன்பத்தில்
இரவொன்று சாக
ஆர்ப்பரிக்கும் புள்ளினங்கள்
அதிகாலை என்று
மீண்டும்
ஐந்து மணியாச்சா?
ஐயய்யோ சரியாச்சா?



## அன்புள்ள நுளம்பாரே



பட்டப் பகலென்ன
படுசாம இருட்டென்ன
வெட்ட வெளி என்ன
வெறும் வீட்டு சுவரென்ன எங்கும்
மெத்தக்கவிபாடி
மெட்டொன்று நீ பாடி
வட்டம் அடிக்கின்ற
வடிவுக்கு நிகருண்டோ

எத்தனை நாளாக
நித்திரை எனக்கில்லை மனக்
குத்தல்கள் ஒருபுறம் உன்
குத்தல்கள் மறுபுறம்
கரைச்சல்தான்.............என்றாலும்
கும்மிக் கைதட்டி
குதியாட வைக்கின்ற
நின்னைக்குறை சொல்ல
குறிப்போதும் எனக்கில்லை
மொத்தப் பகல் முழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடாய் உழைத்தாலும்
மிச்சம் ஏதாமோ? ஏதோ........
பிய்த்துப் பகிர்ந்துண்டு
போதாத வயிற்றோடு
குச்சிக் கை காலை
நீட்டிப் படுத்தேனே என்
இச்சைக்கு இனியாளும்
ஏன் என்று கேட்காளாம்
இற்றைப் பொழுதுந்தன்
இனிமைக்குரலாலே
கத்திக் கவிபாடி
சீராட்ட வந்தாயோ?

என்னாசை நுளம்பாரே
ஏழை என் வீட்டில்
தின்னப் பசிதீர்க்க
ஏதும் கிடையாது
தோலாய் துடிக்கின்ற
தொய்கின்ற உடலுக்குள்
வாகாய் நுழைந்தாலும்
வழியொன்றும் கிடையாது
என்
வீட்டுப் படியேறி
விட்டாய் அதனாலே
காட்டும் திசை ஏகு
கனத்த விருந்துண்டு

நாட்டைக் காடாக்கி
கொள்ளை அடிக்கின்ற
கூட்டம் ஆங்காங்கே
குறட்டை விடும் சத்தம்
நீதி
ஏட்டைப் புரட்டி
ஈனத் தனம் செய்யும்
ஊனப் படைக்கூட்டம்
குறண்டிக் கிடக்கும்
உழைக்கின்ற வயிற்றில்



உழக்கி வாழும்
ஊத்தை முதலைகள்
ஊதிக் கிடக்கும்

கூட்டைக் கலைத்து
குடும்பம் குலைத்து தம்
பாட்டில் கிடக்கும்
பாவிக் கூட்டம் இவர்கள்
கட்டில் மடி மீது
மெத்தைக் கடல் மீது
நுளம்பு வலைக்குள்ளே
கொத்தாகக் கிடப்பர் -நீ
வலை என்று தயங்காதே
நாட்டைப் போல ஒரு
ஓட்டை போடு
அவர் பாதக் கட்டை விரல் தொட்டு
கடைவாய் வரை நன்கு
குத்திக் குத்தி
குறிபார்த்துக் குடிப்பாய் அவர்
செத்த பிணமாகிச்
சரிகின்ற வரை உந்தன்
வித்தை தனைக் காட்டி
விளையாடச் செய்வாய்

நட்ட நடுச்சாமம்
நாடுறங்கும் இச்சாமம்
கெட்ட திருடர்களும்
கேடிகளும் விழிந்திருப்பார்

காட்டுச் சலசலப்பில்
தீ மூட்டிக் கசிப்பாக்கும்
மோட்டுத் தீயோரும்
முழுசாக விழித்திருப்பார்
அவரை
கதறக் கதறத்
துரத்திக் கடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெங்குப் பரிசை
வாரிக் கொடுப்பாய்
கொளுத்தும் கொள்ளை நோயை
காய்ச்சல் தீயை
அள்ளித் தெளிப்பாய்
நுளம்பே உன்னிடம்
வேண்டுதல் ஒன்று


ஏழைகள் வீட்டில்
வழிமாறிப் போகாதே
அடுப்படியில் வெறும் பானை
பழஞ்சீலை விரிப்பின் மேல்
படுக்கின்ற சிறு பிள்ளை அவன்
பசிக்கின்ற வயிற்றுக்குள்
பல சத்தம் நீ கேட்பாய்
அதைத் தாண்டி

ஜன்னல் திரைச் சீலை
மின்குமிழ் அலங்காரம்
தின்னக் கசப்பென்று
தேடாது விட்டிருக்கும்
கன்னல் கனியை ஓர்
மூஞ்சூறு தின்றிருக்கும்
இன்ன அடையாளம்
இவையாவும் கொண்டுந்தன்
தின்னல் வேட்டையைத்
தயங்காது செய் நன்று

பின்னும் ஒரு நாளில்
வந்துந்தன் கவிபாடு
சின்ன நுளம்பாரே
தூக்கம் தான் வருகிறதே



## புயலடித்து ஓய்ந்தது
## புதுவாழ்வு மலர்ந்தது



முத்துத் தமிழ் எடுத்து
முத்தமிழ்க் கவி தொடுத்து
பத்துப்பேர் முன்னிலையில்
பாடவந்த பாவையள் நான்
வித்தைத் தமிழ் கொண்டு
வித்தைகள் செய்கின்ற
வித்தகர் முன் என் கவிதை
வெற்றுக் கூச்சல் மட்டே

பழச்சோலை நடுவினிலோர்
பாகற் கொடி போன்றோன்
கவிஞர்களின் மத்தியிலே
கன்றுக்குட்டி நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலு சொல்லெடுத்து
நறுக்கித் தமிழ்ச் சொல்லை
ஏழாக்கி அச் சொல்லை
மேல்கீழாய் எழுதிவிட்டால்
கவிதை அதுவென்று
கனபேர் நினைக்கின்றார்

தாம்பினைக் கையெடுத்து
தம்பி இதுதாண்டா?
பாம்பென்று சொல்லிப்
பயப்படுத்தப் பார்க்கின்றார்
இருக்கட்டும்
என்கவிதை கூட
எதை உமக்கு இயம்பிடுது
இக்கவிதை யாக்கும்
இவர்களில் கூட
இன்னும் சமாதானம்
தோன்றிடவில்லை
இந்நிலையில்
புயலடித்து ஓய்ந்தது
புதுயுகம் மலர்ந்ததென்று சொல்ல
முயலுவது எதுவரையில்
முடிகின்ற காரியமோ?

புழுகுவது என்பது
புலவருக்குத் தனிக்கலைதான் -ஆனால்
புயல் ஓய்ந்து புதுவாழ்வு
புலர்ந்ததென்று கூறுவது
என்வரையில் அதிகம்

சமத்துவம் நிலவி
சமாதானம் என்றால்
சாத்தியம் இதுவாகும்
பகைப்போர் உள்ளுக்குள்
பனிப்போர் தொடர்கிறது
இதைப்போய் இயம்புவதா
இல்லை இனிப் போர் என்று



அமைதிப் புறாக்களின்
ஆளுகைக் காலமென்றால்
ஆயுதக் கொள்வனவேன்?
ஆளணிச் சேகரிப்பேன்?

வீதிக்கு வீதி சோதனைச் சாவடிகள்
தட்டித் தடவி பெட்டியைக் கிளறி
அடுத்தவன் சொத்தை
ஆராயும் அதிகாரம்
இதுவெல்லாம்
அமைதியின் சூழலா?
இந்நிலையில்
புயலடித்து ஓய்ந்தது
புதுவாழ்வு மலர்ந்ததென்றால் -இது
புழுகன்றி வேறென்ன?
இந்நாட்டின் செல்வங்கள்
இங்கு இருக்க அஞ்சி
எங்கெங்கோ எல்லாம்
இறக்கை கட்டிப் பறப்பது
தன்னாட்டில் போர்க் கோலம்
தணிந்ததென்ற படியாலா?

ஒன்றரை வருடமாக
ஊர்விட்டு ஊர் சென்று
உரையாடல் நடக்கிறது
நல்லதைச் செய்துவிட
நாள்கோள் பார்க்கின்றார்
உள்ளதைக் கொடுத்திட
உள்ளபடி அச்சம் -எதிரி
வல்லவன் ஆகிப் பின்
வம்பு செய்வான்
எனும் தயக்கம்

கொடுக்காதே என்கின்ற
கூச்சல்கள் ஒருபக்கம்
சமாதானம் உரைக்கின்ற
சமயவாதிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ப்பமாய் படமெடுத்து
சன்னதம் ஆடுகின்றார்

கல்விச் சாலைகள் கூட
காப்பு வலயங்களுள்
அறிவுச் சாலைகளே -இன்று
ஆயுதக் கிடங்கு என்றால் -எந்த
அறிவிலி சொல்வான்
அமைதி பிறந்ததென்று?
விரும்பி வந்த அமைச்சரையே
வேலையுனக்கிங்கில்லை
திரும்பிப்போ என மக்கள்
துரத்தும் நிலை எதனால்?
புயலடித்து ஓய்ந்து
புதுயுகம் பிறந்ததாலா?

தயவு செய்து என் கருத்தைத்
தப்பாகக் கொள்ளாதீர் -நானிங்கு
அரசியல் பேசவில்லை
அது எந்தன் நோக்கமல்ல- ஒரு
ஆசிரியை என்பதனால்
அலசிப் பார்க்கின்றேன்

கவிதைக்குப் பொருள் கூறும்
கடமை எனக்குண்டு -அதை
கண்டபடி சொன்னால் எனது
தொண்டதற்குத் துரோகமது

ஆய்வு செய்தும் அகராதி பார்த்தும்
அரும்பதங்கள் பொருள் தெரிந்தும்
அர்த்தம் உரைப்பதென்றன்
அடிப்படைக் கடன் அன்றோ

கற்பிப்போன் முதலில்
கற்றிடுதல் வேண்டும்
படிப்பிப்போன் முதலில்



படித்திடுதல் வேண்டும்
அதை விடுத்து சொற்பொருள் அறியாது
சுமை இறக்கக்கூடாது

அரங்கத்தேறி நின்று
அரங்கமைத்துத் தந்தவர்
கரங்களின் தட்டுக்காய்
என்னால்
கவிபாட முடியாது

சுரங்கத்தே புகுந்து
வைரக்கல் எடுப்பது போல்
அரங்கத்தே நின்று
வைரச்சொல் தொடுப்போம்
அதுவே
கவிதைக்கும் அழகு
கவிஞருக்கும் அழகு
தமிழுக்கும் அழகு
தன் பணிக்கும் அழகு

புயலடித்து ஓய்ந்தது
புதுவாழ்வு வந்ததென்று -கவிதை
புனைந்து வந்து படிப்பதில்
பயனில்லை
கவிஞர்களே
புயல்களாய் மாறி
புன்மைகளை அழுத்தி
நன்மைகளை நாட்டில்
உருவாக்கல் உற்றகடன்
அதன்பின்
புயலடித்து ஓய்ந்து
புதுவாழ்வு மலர்ந்ததென
புனைந்து கவி பாடிடலாம்

நாயும் பூனையும் ஆக இருந்தவர்
தாயும் பிள்ளையும் ஆக மாறினால்
பயங்கரவாத பேயும் ஓடிடும்
பொருண்மியம் ஓங்கிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயும் வயிற்றால்
கதறும் மானிடர்
நோயும் நொடியும்
இன்றி மாறுவர்
தாய் மண் தணலில்
தவிக்கும் நிலையறும்
நேயம் நிறையும்
நிம்மதி தோன்றும்
இந்த நிலவரம் இன்று வந்ததா?
ஈனக் குணங் கொண்ட
எளியோர் எமக்குள்ள
ஊனக் குணத்தாலே
உலகே தீதாச்சு -இந்த
மானக் கேட்டை நான்
மறைத்துக் கவிபாடி
கூனிக் குறுகித்தான்
புதுவாழ்வைப் பாடுவதோ

வல்லவன் பறிக்கின்றான்
நல்லவன் தவிக்கின்றான்
உள்ளவன் சிரிக்கின்றான்
இல்லானோ அழுகின்றான்

வெற்று வெங்காய டப்பாக்கள் பதவி
பெற்று வந்த காரணத்தால்
அற்றுப் போகுது வாழ்வு -மனம்
பற்றி எரியுது நோவில்

ஆற்றலும் திறமையும்
அவருக்குப் பொருட்டல்ல -தங்கள்
ஆற்றாமை காட்டிடும் அவலம்

வல்லானைத் தோற்கவும் வைப்பார்
வசைபாடித் தூர்க்கவும் செய்வார்
இல்லானைக் கூட
இந்திரன் என்பார்
பொல்லாங்கு சொல்லி
போர்க்கோலம் செய்வார்



அல்லாவே யேசுவே
ஆண்டவனே புத்தனே -இந்தப்
பொல்லாதார் கையில்
பொறுப்புகளை ஏன் கொடுத்தாய்?
சமாதான வாழ்வு தனை
சாகடிக்க வேண்டுமென்றா?

நீதி வற்றிய இந்த
வெற்று வேட்டுக்கள்
வேசம் போடும் காரணத்தால்
வந்த வாழ்வு வர அஞ்சி ஓடும்
சந்து பொந்தெங்கும்
வசந்தத்தைத் தேடுகிறோம்

பச்சரிசிச் சோறாக்கி
பதம் பதமாய் கறியாக்கி
உச்ச உருசையிலே
உருவாக்கும் நல்விருந்தை -பலரும்
மெச்சிப் புகழ்கின்ற போது
எச்சில் இது என்று
கச்சல் இது என்று
எவரும் ஏளனம் செய்து விட்டால்
எங்கே வருமப்பா புதுவாழ்வு?
நீதித் தேவதையாய்
நீசர்கள் வரலாமா? அவர்கள்
நடுவர் என வந்தால்
கெடுவர் பலபேர்கள்
இன்று கூட
சமாதானச் சாமரை
வீசுகின்ற நோர்வே
சார்புளதாகிவிட்டால்
சமாதானம் வந்திடுமா?
இவர்கள் தரும்
சாமான் தானம் வந்திடுமா?

அரிசி பருப்பு மாவை அள்ளிக் கொடு
அங்கு வரும் புதுவாழ்வு
அதைவிடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதமும் கப்பலும் அள்ளிக்கொடுத்தால்
அங்கு வருமா புதுவாழ்வு?

பேயரசு செய்தால்
பிணந்தின்னும் சாத்திரங்கள் -என்று
நீதிக் கதை சொன்னான்
பெயர் பெற்ற பாரதி -அவன்
பாரத நாட்டில் கூட
பாகுபாடு சண்டையப்பா

தாழ்ந்தோன் தனை
தன் மலத்தை உண்ண வைத்த
தான்றோன்றித் தனங்கள் சீ.......
சொல்லவும் வெட்கமப்பா
இந்தியாவில் மட்டும் தான்
இப்படியா?
சொந்தத்தை இழந்து
சோகத்தைச் சுமந்து -குருதி
சிந்தச் சிந்த சீரழிந்த போதும் இந்த
சாக்கடைக்குணங்கள்
எமை வாழ விட்டதா?

ஆண்ட பரம்பரை
நாமென்று மார் தட்டி
நீண்ட காலமாய்
போராடி நிற்கின்றோம் நெஞ்சில்
மூண்டு எரிகின்ற
வேள்வித் தீயில் -இத்
தீண்டாமைப் பேய் தன்னை
தீய்த்திட முடிந்ததா?

ஆண்டாண்டு காலமாய்
அடியொற்றி வருகின்ற
வேண்டாத இக்குணங்கள்
வேரோடு போனதா?

அமைதி அமைதி என்று
அலங்கோலம் செய்தார்



அண்ணல் காந்தியை
அறைந்தார் சிலுவையில்
அரசியல் முதற் கொண்டு
ஆன்மீகம் வரை யாவும்
சத்திழந்து போனது

புயலடித்து ஓய்ந்ததுவாம்
புதுவாழ்வு மலர்ந்ததுவாம்
முயலடித்துக் தின்கின்ற
முரடர்களின் வாய்களிலே இரத்த
முடைநாற்றம் வீசிடும்
இப்பொழுது இந்நிலையில்
புயலடித்து ஓய்ந்திடுமா?
புதுவாழ்வு வந்திடுமா?

கயங்களின் கர்ச்சனையும்
காட்டேறிப் போக்குகளும்
பயங்கொள்ள வைக்கின்ற
பரிதாப வேளையிலே
நிஜங்கள் போல் போலிகளும்
நின்றாடும் காலத்தில்
வயங்கிடுமா புதுவாழ்வு
வசந்தங்கள் வீசிடுமா?

நயனங்கள் இன்னும்
நனைவது நிற்கவில்லை
அயல்வீட்டு அடுக்களையில்
அடுப்பு புகைதல் கண்டு -சகிக்க
இயலாமை கொண்டு சில
இரக்க மற்றோர் இருக்கும் வரை
புயலடித்து ஓய்ந்திடுமா?
புதுவாழ்வு தோன்றிடுமா?

கடந்து வந்த பாதையெலாம்
கல்லும் முள்ளும் நிறைந்தவையாம் இனி
நடக்க வந்த பாதையிலே
நல்லவைகள் நிகழட்டும்

பள்ளிச் சிறுவர்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளி விளையாடியதும்
கிள்ளி விளையாடியதும்
இனிய வாழ்வு அன்றோ
சண்டைகள் தான் பிடித்தோம் அங்கு
சமாதானம் இருந்தது
அன்றைய அந்த நிலை
இன்றைக்குத் தோன்றாதா?

பழி வாங்கும் நோக்கோடு
பலிவாங்கும் பாதகர்கள் ஒழியட்டும்
இடிந்துபோன கட்டடங்கள் மட்டுமல்ல
ஒடிந்து போன உள்ளங்களும்
உயிர்க்கட்டும்
மடிந்து போன வளங்களெல்லாம்
மறுபடியும் மலரட்டும்
புதுயுகம் பிறக்கட்டும்
புதுவாழ்வு மலரட்டும்





## போதை தரும் தீது

தீதைத் தருமாம் போதை இதைவிட
யாதை வரைதல் கூடும்
போதைப் பெரு நோய்
புருஷரை மட்டுமா
மாதினைக் கூட
மயக்குவது அறிவோம்
மானம் குலம் கல்வி
வண்மை அறிவு தானம்
தவம் முயற்சி தாளாண்மை
பெண்ணில் மயக்கம் பத்தும்
பசித்திடப் பறக்கும் என்று
பாட்டி ஔவை பகர்ந்தார் அன்று
நாட்டினைக் கெடுக்கும் போதை
வேண்டினால் பத்தொடு
பசியும் சேர்ந்து
அனைத்தும் பறந்தே போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தம் நித்தம் குடிப்பார்
நிம்மதி யாவும் கெடுப்பார்
மெத்தக்குடித்து மேதை போல் ஒரு
மேடைப் பேச்சு மொழிவார்
கத்திக் குளறிக் கண்டதும் பேசி
கனவு உலகில் குதிப்பார்
பெண்டில் பிள்ளை பார்த்துக்குமுற
பாதை தன்னில் நடப்பார்
கொண்ட ஆற்றல் கொள்கை யாவும்
குழியில் போட்டுக் கிடப்பார்

புன்மைச் செயலாம்
போதைக்கடியார்
தன்னை மறப்பான்
தாயை மறப்பான்
தன் அவளை மறப்பான்
மண்ணை மறப்பான்
மழலைப் பிள்ளைச்
செல்வம் மறப்பான்
பின்னை அவனோர் மனுவா?
பிணமே என்றொரு
பெயரை எடுப்பான்

நோய் பிடித்த மனிதனவன்
நாயிலும் கீழாக
நடுத்தெருவில் அலைவான்
பாயும் தேவையில்லை
படுக்கையும் தேவையில்லை
தேய்ந்து தேய்ந்து
தெருக்களில் கிடப்பான்

போதையை ஏற்றப் பல வழி
போகிற இடமோ ஓரிடம்
சாதனை வாழ்வை மாற்றி -அவனை
நூதன சாலை ஆக்கிடும்

பட்டப் பகலில் பாதித் தூக்கம்
பாதை இல்லாப் பயணம்
கெட்ட நடத்தை
கேலிச் செய்கை



கேட்டில் வந்து முடியும்
சட்டம் மீறல் சரியாய் செய்யும்
பகுப்புத்தன்மை மாற்றம் -யாவும்
பட்டுப்போன மரமாய் வெறுமைக்
காட்டில் வாழல் நேரும்

சட்டி பானை உடைத்து வீட்டில்
சத்தம் அதிகம் போட்டு
மட்டமான வார்த்தையாலே
மனிதத்தன்மை குறைந்து
கள்ளத் தனங்கள் கழுதைக்குணங்கள்
மெள்ள வந்து சேரும்
மேன்மை எல்லாம் போகும்

பிள்ளைகளே
போதைப் பாவனை கொடிது உங்கள்
கைகளை நாடி வந்து கொண்டிருப்பான்
புத்தகப்
பைகளைத் தேடிப் பைய நடப்பான்
தெரிந்தவர் அறிந்தவர் புரிந்தவர் வழிவில்
புன்னகைக் கைகளை
நீட்டி அழைப்பான்
செல்வங்களே
என்புருக்கி நோய் போன்ற
போதை நோய் பெற்று
நின் தகமை நீ இழந்தால்
நெஞ்சுதான் பொறுத்திடுமா?
போதை தீதென்று
போதிக்க வேண்டுமா?

தலைவராய் காணவென
தவங்கிடந்து உருவாக்கி
நிலையிலே நீ உயர
நித்தமும் நினைக்கின்றோம்
தலைவிதியை மாற்றி
தரங்கெட்டே போனால்
உலையிலே உயிர் போல
துடிக்காதோ நெஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனுடம்பு பெற்றதெல்லாம்
உயர் நிலையை அடைவதற்கே
நாணி ஒதுக்கி
மற்றவர்கள் வெறுத்திடவா?
வளையும் காலம்
வாலிபக் காலம்
வளர்ச்சியும் தளர்ச்சியும்
இதில் தான் உண்டு

போதை அருந்தி
வீதியிலே நீர் கிடந்தால்
தெருநாயும் தேடிவந்து
உனை முகர்ந்து சென்றுவிடும்
ஆதலினால் தீதை தரும்
போதையினை நீ வெறுப்பாய்
ஓவியம் போல் திகழும்
ஒயிலான உம்முடல்கள்
சீவியத்தின் விழிம்பு சென்று
சீரழிந்து போகலாமோ?
ஆவி துறப்பிடினும்
அறத்திற்காய் ஆக வேண்டும்
ஆதலினால் தீதை தரும்
போதையினை நீ வெறுப்பாய்





## தமிழே பொங்கு

சங்கம் வளர்த்து விட்ட
சிங்காரத் தமிழே
எங்கும் ஒலிக்கின்ற
எக்காளத் தமிழே
பொங்கிப் பொலிகின்ற
பூபாளத் தமிழே
எங்கள் இதயத்தின்
தீயான தமிழே
பங்கம் இல்லாத
புதுமைத் தமிழே
துக்கம் உயர்கின்ற
துய்ய தமிழே -என்
அங்கம் உயிர் உந்தன்
அடியில் சரணம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவின் பாலெடுத்துப்
பொங்கலாம்
அடுப்பில் வடிசோறு
பொங்கலாம்
தீயின் மலை கூட
பொங்கலாம் -எம்
தாயின் விழி பொங்கல்
ஆகுமா? -அதை
பார்த்து இருந்திடல்
கூடுமா?

பொங்குவது என்பது
எம்மவர்க்குப் புதிதல்ல
சிங்களப் படை அன்று
செருக்களம் சேர -நாம்
செங்களம் மீதினில்
பொங்கினோம்
கண்களில் நீரினைப்
பொங்கினோம்

புண்களில் வேலினைத்
துளைக்கின்ற வேதனை
தங்கிய போதிலும்
பொங்கினோம் -நாம்
மங்கிய ஒளியில்
பழந்திடும் அந்தப்
பாழ்படும் வேளையில்
பொங்கினோம்

தங்கையும் தம்பியும்
தீயிலே வேகையில்
தாங்குமா நெஞ்சென்று
பொங்கினோம் -எம்
பொங்கலுக்கான
பானை சிதறிப்
போகிய போதிலும்
பொங்கினோம்



மங்களம் அக்கா
மகவொரு வீழ
மார்பிலே அறைந்து
பொங்கினோம் -இன்று
எங்களின் வீட்டிலே
இருந்திட எண்ணும்
உங்களைப் போ எனப்
பொங்கினோம்

எண்ணம் இனிக்கின்ற
கனவில் மிதக்கின்ற
ஏதும் அறியாத
இனிமைச் செல்வங்காள் -நீங்கள்
கண்ணை நிகர்க்கின்ற
கல்விக்கு வந்த துயர்
கழுத்தறுப்பு ஏதேனும்
அறிவீரா?

நீ நிற்கும் பூமியில்
நிம்மதி சேர்ந்திட
நெஞ்சிலேகுண்டுகளை
சுமந்தவரை அறிவீரா?
பஞ்சணை இல்லாமல்
படுக்கையும் இல்லாமல்
வெஞ்சமர் மீதிலே
வீழ்ந்ததை அறிவீரா?

பிறக்கின்ற பச்சைமண்
பழுதின்றி வாழ்ந்திட
தன்னுயிரைத் துச்சமாய்
துறந்தோரை அறிவீரா?
அச்சமின்றி நீ வாழ
தாம் அழிந்தோர் அறிவீரா?
இச்சகத்தில் தமிழருக்கோர்
இருப்பளித்தார் அறிவீரா?

மொழி காக்க முயன்றோரை
முத்தமிழைக் காத்தோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவாளோ தமிழ் என்று
அழுதேங்கி நின்றோரை
நலிகின்ற தமிழ் காத்த
நல்லோரை பெரியோரை
பலியாகிப் போனோரை
பார்மீது அறிவீரோ

எங்களின் வீட்டிலே
இருக்கிறார் மாற்றார்
வாழ விடமாட்டோம் என்று
மறுக்கின்றார்
துன்புறலா எங்களுக்கு
பரிசாச்சு?
துயர்க்கடலா எங்களது
விழியாச்சு?

பொக்கி எழு உந்தன்
புதுவீடு நோக்கு
எங்களது எங்களது
என்று குரல் கூறு
கெட்டவரை கொடியவரை
எத்தித் திரிவோரை
எட்டி உதை போடு அவனை
ஏறி மிதி போடு நன்கு

பாட்டனும் பூட்டியும்
வாழ்ந்த மண் -அவர்
பரம்பரை இங்கு
ஆண்டமண் -அதை
ஏறி மிதிப்பவன்
ஆரடா?
எச்சில் உண்கின்ற
நாயடா

பச்சை வெளிப் பசுமை
பாழிடமாய் ஆச்சு
இச்சைக்கு இனிய கடல்



இரத்தமாகப் போச்சு
உற்ற தோழன் உறவுரிமை
அத்தனையும் போச்சு
ஊர் மனைகள் யாவுமிங்கு
உருக்குலைந்து போச்சு

ஆட்சியில் உள்ளவர்
காட்டிய திசையில்
மீட்சியே இன்றிக்
கிடக்கிறீர் -அவர்
வீசி எறிகின்ற
கூலிப் பணத்திற்கு
கூட்டமாய் செத்து
மடிகின்றீர்

வன்முறை வளர்க்கும்
வார்த்தையை நம்பி
வசைகள் செய்து
கிடக்கிறீர்
வல்லினம் ஆகி
வலிமையும் அற்று
வேதனைப்பட்டுத்
துடிக்கிறீர்

குட்டக்குட்டக்
குனிபவர் அல்ல
கூலிப் படை நாம்
அல்ல -வாலை
ஒட்ட நறுக்கிட வந்தோம்
ஓர்மம் நெஞ்சில்
கொண்டோம்

ஈன்ற தமிழ் இங்கு
பொங்கும் -அறம்
பேசும் தமிழ் நெஞ்சு
பொங்கும்
ஆன்ற அறிவிங்கு
பொங்கும் -தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் தெளிவிங்கு
பொங்கும்

சத்திரம் சாவடி
பொங்கும்
சித்திர வதைக் கூடம்
பொங்கும்
சத்தியம் இனியிங்கு
பொங்கும் -வரும்
சந்ததி இனியிங்கு
பொங்கும்

எத்திசை போகினும்
பொங்கும்
ஈழத்தமிழ் இங்கு
பொங்கும்
சங்கத் தமிழ் இங்கு
பொங்கும்
சாந்தி பெறப்
பொங்கும் பொங்கும்





## பண்டாரவன்னியனைக் கொண்டாடும் நாளின்று

வந்தோரை வாழ்வித்து
வருவோரை வரவேற்று
நொந்தோரைக் கைதூக்கி
நேராக்கி விடுகின்ற
செந்தேனும் சிறுநெல்லும்
சொரிகின்ற திரு மண்ணின்
பண்டார வன்னியனைக்
கொண்டாடு புகழ்பாடு

வன்னித் தமிழன்
வணங்காத் தமிழன் தன்
சென்னி தாழ்ந்து
அறியாத் தலைவன்
பொன்னி விளையும்
புது நெல் பூமி
தன்னிற்கதிபன்
கன்னித் தமிழன்

அந்நியன் முதுகை
முல்லையில் ஒடித்து
தன்னிலை நாட்டி
தனிப்புகழ் காட்டி
மன்னிய வீரப்
புரமதை ஆண்ட
வன்னிய வீரன்
வண் புகழ் பாடு

ஆதிக்கர் முன்பு
அடி பணியா நின்றான்
பேதி மருந்தாகிப்
புறமோட வைத்தான்
மோதிப் பார்த்தோர்
முடியாமல் போனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை செய்தான்
சரித்திரம் ஆனான்
அடங்காத் தமிழனாய்
அடலேறு வீரனாய்
மடங்காத் தலையனாய்
மறையாத தீரனாய்
திடங் கொண்ட தோளனாய்
வாழ்ந்தவன்
திண்ணிய நெஞ்சுடன்
ஆண்டவன்

அந்நியன் அடித்தாலும்
அடி பணியா வன்னியன்
எண்ணிய படியெல்லாம்
இருந்தாண்ட வண்மையன் அவன்
திண்ணிய பாதங்கள்
திரிந்த இப்பூமியில்
என்னவோ எது ஏதோ
எப்படியோ நடக்கிறது

நட்ட நடுத்தெருவில்
நாறிக் கிடந்தோம்
நாயோடும் பேயோடும்
வாடிக் கிடந்தோம்
வெட்ட வெளியெங்கும்
வீழ்ந்து கிடந்தோம்
வேகும் துயராலே
வெந்து கனன்றோம்
எனினும்

மண்ணைக் காத்தற்கு
மைந்தர் தனை ஈன்றோம் -மா
வீரர் ஆதற்கும்
வளையாது நின்றோம்
வன்னியன் பண்டாரன்
வழிகண்டு நின்றோம்
வணங்காத முடியோடு
வளமாக நின்றோம்
ஏறி மிதித்தாலும்
எழுந்து நின்றோம்
தேசமே ஈழமாய்



சுவாசமாய் கொண்டோம்
சுவாசக் காற்றிற்கும்
நாசம் செய்கின்ற
காக்கைக் கூட்டங்கள்
இல்லாமல் இல்லை

காட்டிக் கொடுக்கின்ற
காக்கையன் கூட்டம்
காலங்கள் காலமாய்
சாவதும் இல்லை
கட்டபொம்மனுக்கும்
ஓர் எட்டப்பன்
வன்னியன் ஆட்சிக்கும்
ஓர் அந்நியன்

நேருக்கு நேர் நின்று
போராட முடியாது
நீறுக்குள் நெருப்பாக
நின்றுன்னைச் சுட்டார்
சிக்காத சூரியனைச்
சிறையிட்ட புகழ்தன்னை
செப்பேடு தனில் இட்டு
தம்பெருமை நட்டார்

பெட்டிப் பாம்பாகிச்
சுருண்டானா வீரன்?
பூச்சாண்டி கண்டஞ்சி
பதுங்கி வாழ்ந்தானா?
விழுந்தாலும் வீழாத
பரம்பரை மண்ணிது
எழுந்த பின் ஓயாமல்
வீழாத மண்ணிது

முன்னவர் மூத்தவர்
பேணிய மண்ணிது
பின்னவர் காத்திடப்
போரிடும் மண்ணிது
கண் நிகர் பொன்நிகர் -எம்
பெண் நிகர் மண் இது
இன்னுயிர் ஈந்ததை
ஏற்றிட மாட்டோமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்வார் என்பது வெளிப்படை



கரும்போடு சுவை சேர்ந்த சொற்கொண்டு
கவிபாட வந்துள்ள வித்தகரே
எறும்பாகி சுவை நாடி வந்துள்ள
இனியதமிழ் எனதன்புச் சொந்தங்காள்
அரும்பாடுபட்டே யான் ஆக்கிவந்த
அறியாத சிறு பிள்ளைப் பாட்டொன்று
விரும்போடு கேட்பீரோ என்றேங்கி
விளையாட வந்தேன் முன் பொறுப்பீரே

குறும்புகள் செய்துகுடும்பியைப் பற்றி
குரல்வளை நசித்துக்குருதியைக்குடித்து
பருந்துகள் மேலே பறந்திடும் வேளை
பாதகர் செயலைப் படித்திடவோ -அன்றி
கருங்குழல் சுட்டு வீழ்த்திய வித்தை
கதையினைக் கதறி அழுதிடவோ -அவர்
மருந்துகள் இன்றி மணலிடைப் புழுதி
விருந்தெனவானதை உரைத்திடவோ

கரங்களில் ஏந்திய ஆயுதம் கொண்டு
களம்பல கண்டதைக் கூறிடவோ -அவர்
கருகிய போதிலும் குருதியில் விடுதலைக்
கானமிசைத்ததைப் பாடிடவோ
பெருகிய பேரிகை முழங்கிடும் வெற்றியை
பலமுறை பலமுறச் செப்பிடவோ
வருமிசை நாளில் வெல்லுவர் என்றொரு
வெளிப்படை வாக்கினைக் கூறிடவோ?

கட்டிக் கரும்பை கம்புகளாக்கி
பச்சைப் பயிரைப் பாழிடமாக்கி
பிச்சை எடுக்க வைத்திட எண்ணி
பித்துப் பிடித்து பேயாய் நின்றார்
பாதை அடைத்துப் பார்த்திருந்தார் -பசி
காதை அடைக்கும் என நினைத்தார் -இங்கு
பாழிடம் வாழிடம் ஆனது -வெட்ட
வெளியிடைச் சோலையும் ஆனது



புறம் நின்று முற்றுகையிட்டு
போரறம் கொண்டாரோ -எம்மவர்
திறம் கண்டு கலக்கி பெரும்
தவறென்று எண்ணாரோ
பறம்பு மலை இது எனப் புரியாரோ -எம்
பாதையில் விலகி நில்லாரோ
மறவீரர் கையிலே மடியாமல்
மறையாரோ தம்முயிர் காப்பாரோ

வள்ளல் பாரி மன்னன்
நெஞ்செமக்கு உண்டெனினும்
நஞ்சுக்கு நிகரவரை
நம்புதற்கு இல்லை
பிஞ்சுகளும் போர்க்களத்தில்
வெஞ்சமரில் சாயும்
நெஞ்சுறுதி கொண்டவர்கள்
அஞ்சுவரோ துஞ்சுதற்கு


காசுக்காய் படையில் சேர்ந்து
கடன் கழிக் கடமை செய்யும்
தூசுக்கு நிகராய் ஆன
கூலிகள் முன்னே எங்கள்
தேசத்தைக் காக்க எண்ணி
பாசறை நோக்கி ஓடும்
பேசற்கு அரிய வீரப்
புதல்வரைக் கூறுவேனோ

வெங்களமாடி வீழ்கிற போதும்
விடுதலை என்று வாய் சொல்லும் -பூமி
செங்களமாகச் சிந்திய செந்நீர்
சித்திரமாய்ப் புகழ்பாடும் -நாளை
வெண்பனி போல் துயர் வேதனை யாவும்
வெல்லுவர் என்பது வெளிப்படை
கண்களில் கனவுகள் நனவென ஆக்கும்
காலமொன்றாக்குவர் தமிழ்ப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியும் என்று காத்திருந்தோம்



விடியும் என்று காத்திருந்தோம் -நாம்
விடியும் எனக் காத்திருந்தோம்
வேதனை இருட்டுக்குள்
விலக்கினமாய் வெம்பியழ
சோதனை விலகும் புது
சொர்க்கம் வரும் காத்திருந்தோம்

விளக்கேற்றி வைக்கையிலே
வீசு காற்றில் அது சாக
விடியும் எனக் காத்திருக்க
இருளோடு விடிந்தது

அடிமையெனகுடிமைகளை
ஆக்கினைகள் செய்திருந்தார்
வடிவெடுத்த விலங்கினமாய்
வாழ்ந்திருந்தார் முதலையென
பிடியிழந்த பேதைகளை
பிணக்குவியல் ஆக்கி நின்றார்
விடியும் எனக் காத்திருந்த
வேதனைகள் வேகவில்லை



சாதி என்ற நாறுகின்ற
சாக்கடையில் நின்றிருந்து
போதனைகள் செய்கின்ற
புழுக்களாக உழன்றிடுவார்
அடிதடியும் ஆக்கினையும்
அவலம் என்று ஆகியது
விடியும் எனக் காத்திருந்தோம்
வேதனை தான் மிஞ்சியது

சீதனப் பேயால் மாதர்
சீரழிகின்றார் நாளை
சீக்கிரம் விடியும் என்றால்....
சீதனம் கொண்டா நல்ல
சிவப்பியைக் கொண்டா ஒரு
வேதனம் ஆக நல்ல
கொண்டாவைக் கொண்டா என்றால்
விடிந்திடுமா அக்காலை

அடுப்படிக்குள்ளே நாளும்
அரிவையர் வாசம் செய்தார்
வெளியினில் செல்லாய் என்று
வெருட்டுவாள் அம்மா கூட
வழியினில் பெடியள் பிள்ளை
கவனமென்றப்பா சொல்வார்
இளித்து நீ நில்லாய் என்று
அண்ணனும் அடிப்பான் தங்கை
பக்குவம் பழகி நிற்க
விடியும் என காத்திருந்தோம்.

இரவிரவாய் ஷெல்லடியில்
செத்தவர்கள் தெரியவில்லை
அரவமெலாம் ஓய்ந்து காலை
விடியும் எனக் காத்திருக்க வேகப்
புரவியாக வந்த செய்தி
புளிகரைக்க வைத்த துயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமிழந்தவர் தம் துணைக்
கரமிழந்தவர் சொந்தப்
புரமிழந்தவர் தம்மவர்
அரண் இழந்தவர் கதை
விடியவில்லை எம்
வேதனையும் தீரவில்லை

இலங்கையில் சுதந்திரம் கிடைத்ததும்
விடிந்தது என மனம் களித்தது
கலங்கிட வைத்தனர் கயவர்கள்
காரிய வாதிகள் புரிந்தது

ஐம்பதுகளின் ஆரம்பத்தில்
எம் பதைப்புத் தொடங்கியது
நம்மவர்கள் காத்திருப்பு
இன்று வரை தொடர்கிறது

கல்விக்கு ஒரு விளக்கு யாழ்
கலங்கரையாக நின்ற எம்
தொல்லுக்குப் பெருமை வாய்ந்த
தொகையான நூல்கள் கொண்ட
நூலகம் எரிந்தது எம்
நெஞ்சுகள் கூட எரிந்து
நொந்தது நாளை எங்கள்
பிஞ்சுகள் என்ன செய்வார்
பொக்கிசம் புதைந்து போச்சே என
புழுங்கிய காலம் நாளை
விடியும் என்று காத்திருந்தோம்

சிறு விளக்குகளாக பள்ளிச்
சிறுவனின் கையில் நெருப்பு அவன்
குறுகுறு கண்ணில் கூட
குவிந்தது சினத்தின் கொழுந்து அன்று
விடியும் எனக் காத்திருந்தோம் இனி
விடியும் எனக் காத்திருப்போம்.



# அகத்தில் இனித்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எங்கள் தமிழ்

ஆர்ப்பரிக்கும் சிலம்பணிந்து நடைபயின்றவள்
கைவளையல் ஓசையிலே கதை பயின்றவள்
சீர்மணியை மார்பணிந்து சிறந்து நின்றவள்
மேகலையாம் மெல்லிடையால் மனங் கவர்ந்தவள்

குண்டலங்கள் ஆடுகையில்குமரித் தமிழுக்கு
கூடுகின்ற பேரழகை பேச முடியுமா?
மண்டலத்தில் மாறிடாத இளமையானவள்
மாமணியே நீ எமக்கு மழலையானவள்



பக்தி செய்யத் தோன்றுகின்ற பசுமையானவள்
பாமரரும் படித்தவரும் துதிக்கும் தேவதை
முத்தி தரும் இறைவனவன் மொழியுமானவள்
மூத்தவர்கள் காத்துவந்த முதன்மையானவள்

வித்தகர்கள் தன்னை ஈன்று வினயமானவள்
வேந்தர்களும் போற்றி வந்த வேதமானவள்
பக்தர் உந்தன் பாதம் போற்றி பரவி நிற்கின்றோம்
பாமகளே எங்கள் தமிழ் நீயுமானவள்

தங்கமென நின்றவளை துயரம் சூழுது
தாய்மொழியை தாம் மறந்த தருணமாகுது
பங்கமொன்று வந்து சேர்ந்து பதைபதைக்குது
பாவை உந்தன் மொழி மறந்த பாதகராலே

அன்னியரின் நாட்டினிலே அடிபணிகின்றார்
அடுத்தவரின் மொழிபயின்று உனை மறுக்கின்றார்
கண்கலங்கி நீயழுதால் நான் பொறுக்கவோ
காப்பதற்கு நாமிருப்போம் எங்கள் தமிழடா

சுந்தரத்தேன் தமிழை உண்டு வலிமை கொள்ளுவோம்
சேர்ந்திருக்கும் அறிவியலை புரிந்து கொள்ளுவோம்
செந்தமிழால் செப்புகின்ற பண்பு காணுவோம்
சந்தனமாய் அள்ளி எங்கள் மேனி பூசுவோம்

வெந்தழலில் வேகும் போதும் வீரம் காணுவோம்
வேதனையில் கூட உந்தன் இனிமை பாடுவோம்
பைந்தமிழே பாவை உந்தன் பக்தராகியே
எங்கள் தமிழ் என்று விழி கூட மூடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இது நடக்குமா?

எத்தனையோ பிறவிகளை எடுத்த போதிலும்
இப்பிறப்பில் உள்ள இன்பம் என்றும் தோன்றுமா?
அத்தனையும் மாறி இங்கு வெறுமையானது
அன்புறவு கெட்டு வாழ்வு நீறு ஆனது

சத்தியத்தை போதிக்கின்ற தங்க நாட்டிலே
நித்தியமும் செந்தமிழும் பங்கம் சேருது
முத்தனைய நாடு வீணில் மூழ்கிப் போகுது -எங்கள்
மூவினமும் வேறு திசை நோக்கி ஓடுது

ஏழை என்ற அடிமை என்ற இழிவு வாழுது
எத்தர் கூட்டம் ஏணியிலே நின்று ஆளுது
கோழையாகி கொள்கை தன்னில் அஞ்சி வாழ்வதால்
கோபுரமாம் நாடு வெறும் மண்ணில் சாயுது

யுத்த மற்ற காலம் என்ற கனவு பலிக்குமா?
யேசு,புத்தர் மதங்கள் கூறும் அறம் நிலைக்குமா?-இதய
சுத்தியோடு வாழுகின்ற சுகம் கிடைக்குமா?
சொர்க்கமொன்றைக் காணுகின்ற வரம் கிடைக்குமா?

சொந்தமண்ணை விட்டு ஓடும் நிலை மறக்குமா?
அகதி வாழ்வு இன்றி எங்கள் தலை தழைக்குமா?
மந்தமான நாடு சொர்க்க பூமியாகுமா?
நாலுதேச மக்கள் கூடும் மன்றம் ஆகுமா?

இந்த நிலை தோன்றும் அந்த நாள் இருக்குமோ?
எமது உயிர் போன வெறும் கூடிருக்குமோ?
சந்ததிகள் சேர்ந்து வாழ வழிபிறக்குமா? -யாரும்
சொந்தம் என்று கூறுகின்ற கொடி பறக்குமா?



## மெல்லத் தமிழ் இனிச் சாகாது



மெல்லத் தமிழ் இனிச் சாகுமாம் -இந்த
மேதினியில் அற்றுப் போகுமாம் -இதை
சொல்லத் துணிந்தவன் யாரடா -இந்தச்
சொல்லிப் பொருளில்லை பாரடா

கண்டானா எம்மவர் வீரத்தை -அதை
காணுமுன்னே செத்துப் போனானே -அந்த
முண்டாசுக் காரனைக் கூட்டிவா -அவன்
முறுக்கு மீசையை ஆட்டிவா

இந்தியாவில் அது ஆகலாம் -பாழும்
இங்கிலிசால் தமிழ் சாகலாம் -ஆனால்
இந்த மண் ஈழத்தில் ஆகுமா -எங்கள்
இன்பத் தமிழ் செத்துப் போகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியம் வந்திங்கு ஆண்டது -பின்னர்
ஆங்கிலம் ஆட்சியைக் கொண்டது -பொங்கும்
பாரிய கடலும் உண்டது - எங்கள்
பைந்தமிழாள் செத்துப் போனாளோ

பிள்ளைகள் நான்கைந்து பெற்றனள் -பெற்ற
பின்னரும் நொந்திவள் போனாளோ?
பிள்ளைத் தனமாகப் பேசிடும் -பாரதி
பித்தன் என்றே உன்னைச் சாடுவேன்

எத்தனை காலமாய் ஆண்டவள்
எத்தனை சோதனை கண்டவள் -தன்
சித்தம் குலைந்திங்கு போனாளோ -ஒரு
சொல்லைதான் இல்லாமல் விட்டாளோ?

எட்டுத் திசையிலும் சென்றவர் -மண்ணை
எண்ணித் துயருற்று மாய்கையில்
கெட்டுத்தான் போவாளோ செந்தமிழ் -கொடி
கட்டிப் பறந்திட மாட்டாளோ

ஆற்றலும் ஆயுளும் கொண்டவள் -பல்
ஆயிரம் ஆண்டுகள் நிற்பவள்
நேற்றைய காலத்தைப் போலவா? -இன்று
நிற்கின்றார் செந்தமிழ் காத்திட

செந்தமிழ் அன்னையைக் காத்திட -எரி
செந்தழல் குளிக்கவும் அஞ்சிடோம்
எந்தத் துணிவோடு கூறினாய் -எங்கள்
ஈழத்தில் தமிழ் மொழி சாகுமா?

எங்களின் ஆருயிர் ஈழத்தில் -தமிழ்
ஆளுது என்பதை வந்துபார்
மெல்லத் தமிழ் இனிச் சாகாது -இந்த
மேதினியில் அற்றுப் போகாது



# என் உயிரே



எண்ணும் பொழுதென் உள்ளத்தினுள்ளே
உயிராகி ஊற்றாகி உணர்வான தமிழே
பண்ணாகி பாவாகி பூவாகி தாயாகி
என்னுள்ளே தீயாகி எரிகின்ற தமிழே
புண்ணாகி புழுவாகி நெளிகின்ற போதும்
மண்ணோடு மண்ணாக மடிகின்ற போதும்
என்னாவி உன்னோடு ஒன்றாக வேண்டும்
அம்மா உன் மார்மீது தமிழுண்ண வேண்டும்

(வேறு)

கடித்துச் சுவைத்து கசக்கிப் பிழிந்து
கரைத்துக் குடிக்க வேண்டும் -உனை
படித்துப் பார்த்துப் பாவை உந்தன்
பாவில் துடிக்க வேண்டும்
வெடிக்கும் உள்ளம் வெந்து நீறாய்
வெறுமை ஆக வேண்டும்
துடிக்கும் நெஞ்சக் கூட்டின் உள்ளே
தமிழே உயிராய் வேண்டும்

(வேறு)

கட்டித் தழுவத் தோணுதே
காலைப் பிடிக்கத் தோணுதே
வெட்டிப்பார் என் நெஞ்சிலே
வேறோர் ஜீவன் இல்லையே
நெஞ்சுக் குழிக்குள் விம்மலாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் சொரியும் கண்களாய்
பிஞ்சென்றான என்னுயிர்
பேதையாகச் செய்வதோ?
மெய்யாய் மேனி நடுங்குது
மேன்மை ஆவி ஒடுங்குது
ஐயோ ஏதோ உள்ளதே
எழுதக் கவிதை இல்லையே
தமிழே என்தமிழே உனை
அள்ளிப் பருகிப் புசித்து எந்தன்
ஆவி முடிக்க வேண்டும்
அணைப்பாய் என்று ஏங்கும் எந்தன்
அழுகை ஓய வேண்டும்
அழியும் வாழ்வில் மருந்தாயுண்ணும்
அமுதம் ஆக வேண்டும்

(வேறு)

தமிழே என் தமிழே
நீ என் காதலன் நின்
கால் கழுவி நீரெடுத்து
நான் குடிக்க வேண்டும்
காலமெல்லாம் உன்னடியில்
நான்கிடக்க வேண்டும்
கோல வெழில் காட்டும் மொழி
கவிபடிக்க வேண்டும்
கோமகனே உன் மடியில்
கண்ணுறக்க வேண்டும்
காளைத்தமிழ் உன்னழகுக்
கைகலக்க வேண்டும்
கலவியிலே புதுமை கொஞ்சும்
கவி பிறக்க வேண்டும்





# ஆசிரியர்

வித்தொன்று முளையாகி மரமாகுது
நிலமொன்று அதைமேலே உருவாக்குது
சத்தெல்லாம் தான் ஈந்து பயனாகுது
சால்புக்குப் பெயராக அது வாழுது

முத்தொன்று சிப்பிக்குள் நிழலாடுது
மூலத்தின் பொருளாக நின்றாகிய
சிப்பிக்குச் சேர்கின்ற சுகம் ஏதடா -அதன்
சீர்மைக்கு செகம் மீதில் ஈடேதடா

மண்ணாகக் கிடக்கின்ற மாணிக்கத்தை
மாண்புக்குச் சேர்க்கின்ற மகத்தானவர்
விண்ணாளச் செய்கின்ற விளக்கானவர்
வீரத்தை விளைக்கின்ற களமானவர்

கண்ணென்று காக்கின்ற இமையானவர்
காலத்தின் தேவைக்கு உரமானவர்
பண்ணாலே துதிக்கின்ற பொருளானவர்
பாருக்கே பாலூற்றும் தாயானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளோட்டி அறியாமை அழிக்கின்றவர்
ஈரேழு ஜென்மத்தின் பயனானவர்
அருளோடு கற்பிக்கும் குருவானவன்
அகிலத்தில் அவலங்கள் தனையோட்டுவார்

உருள்கின்ற உலகத்தின் நிலையானவர்
ஊருக்காய் எரிகின்ற மெழுகானவர்
திருவாழும் தகமைகள் கொண்டாளுவர்
தேவைக்கு ஏணியென நின்றாகுவார்

எத்தனையோ மனிதர்களும் ஏறி மிதிக்கும்
ஏணிக்கும் வலியுமுண்டு துயருமுண்டு அது
அத்தனையும் தாங்கி நிற்கும் தயங்காதடா
தாய்மைக்கு புவி மீது விலையேதடா

செத்தவர்கள் தம்மை உயிர் ஊட்டி விடுவார்
சேவைக்கு என்று உயிர் போக்கி விடுவார்
மெத்தவும் தான் மேன்மையினை நாட்டிவிடுவார்
மேலான வாழ்வுதனை காட்டி விடுவார்



## சூரியன்



கடலின் இனிய கீதத்திலே
காற்றின் இனிய நாதத்திலே
மணலின் இனிய அணையினிலே -எனை
மறந்தே இனிது இருக்கின்றேன்

பஞ்சு முகிலின் மெத்தையிலே
பாவை அவளும் சிரிக்கின்றாள்
நெஞ்சைக் கவரும் நிறங்களிலே
நயமாய் மயக்கும் வரங் கொண்டாள்

(1986)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறு வயதில்




பதினாறு வயதினிலே பாவையெனை
கொள்ளை கொண்டாய்
பதிலாக என்மனதை உன்னிடமே
தந்து விட்டேன்
புதிதாக அரும்புவிடும் காதல் மொட்டு
மலர்ந்திடவே
புது மனதாள் மன்னவனே உன்னையெண்ணி
ஏங்குகிறேன்
அன்பு எனும் அகல் விளக்கை ஏற்றிவிட்டாய்
என்மனதில்
அணையாத தீபமென எரியவிட்டாய்
என்நினைவில்
துன்பமெனும் உன் நினைவை படரவிட்டாய்
என் கனவில்
துணையாக வருவாயா என்னுயிரின்
காவலனே
உன் முகத்தைப் பார்ப்பதற்கு ஓரவிழி
பார்க்கையிலே
மண்முகத்தை தான்நோக்கி வேகமாகச்
செல்வாயே
பொன்முகத்தைப் பார்த்திருப்பேன் வாசலிலே
கோலமிட்டு
உன்மனதில் குடியேற மனவாசல்
திறவாயா?

(1986)



## பறவைகள் நினைவுகள்



இதயவானிலே இரண்டு பறவைகள்
இறகு விரித்துமே பறந்து செல்லுது
உதயமாகிய காதல் நெஞ்சிலே
உரிமையோடுமே உறவு கொள்ளுது

காற்று வேகத்தை கடந்து செல்லுது
கால தாமதம் இன்றி செல்லுது
கூற்று வந்தினும் கவலையின்றியே
காவியங்களும் நெஞ்சில் தோன்றுது

அன்பை நெஞ்சிலே ஏற்றுக் கொண்டதால்
அண்டசாகரம் தூசியானது
உன்னையெண்ணியே நாளும் ஏங்கிடும்
உறவு என்னையே சேர்ந்துவிட்டது

வண்ண முகிலினைப் பார்க்கும் போதிலே
எண்ணம் யாவுமே உன்னைத் தேடுது
கண்ணில் கனவுகள் தேங்கி நின்றிட
காதல் நினைவுகள் என்னை வாட்டுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவா நீ எங்கே?



எத்தனை காலமாக
உன்னை நான் தேடுகிறேன்
எந்தனுக்கருளாயோ
உன்னருள் தாராயோ
இத்தரை மீதிலெமை
காத்திடவும் யாருமிலை
வித்தகனே இறைவா
வந்தெமையும் காராயோ
சத்தியமும் செத்ததாலே
சந்ததியும் மாளுமையா
நித்தியமும் காப்பவரே
உன்னை நான் தேடுகிறேன்



புத்தியில்லா மாந்தரையே
மீட்டிடவும் வேண்டுமென
நித்தம் நித்தம் வேண்டுகிறேன்
நித்தியனே நீ எங்கே
வஞ்சனையால் நெஞ்சிலன்பு
இழந்து விட்டார் என்னிறைவா
நஞ்சினையே கொண்டவர்கள்
மிஞ்சியுமே போய் விட்டார்
கெஞ்சியுனை கேட்கின்றேன்
எங்கொழிந்து போய் விட்டாய்
அஞ்சி யானும் சாகின்றேன்
அன்புருவே நீ எங்கே
வறுமையாக வாடி நிதம்
சிறுமையாக மாறிவிட்டோம்
பொறுமையினி இல்லை இங்கு
பொறுத்திருந்து காத்து விட்டோம்
வெறுமையாக மாறு முன்னே
வேண்டுகிறேன் என்னிறைவா
நிறைவுடனே நாம் வாழ
நீ எங்கே தேடுகிறேன்
பசி வறுமை கொடுமையாலே
வாடுகிறேன் என்னிறைவா
நடுநிசியில் கண்ணுறக்கம்
இல்லாமல் மாளுகிறேன்
கசிந்துருகும் கண்ணீரில்
கண்திறந்து தேடுகிறேன்
காருண்யம் ஆனவனே
நீ எங்கே தேடுகிறேன்

(1987.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன்னை விடுகின்ற
# கண்ணீரைத் துடைக்காரா?



ஐம்பெரும் காப்பிய அணி பூண்டவளே
அழியா இன்பச் சுவை பூண்டவளே
ஐம்புலனடக்கி அடி பணிகின்றோம்
மங்கலம் பொங்கும் மலர் போன்றவளே

தித்தித் தினிக்கும் தேங்கனிச் சாற்றின்
திகட்டாதிந்த செந்தமிழ்ப் பேச்சு
செத்துத் தொலையும் நிலைகண்டழுவார்
செகத்தில் இல்லை என் செய்வோம் நாம்

தத்தித் தவழும் பைந்தமிழ்ச் சேயை
தணியா இன்பக் குழலினில் யாழை
பொத்திக் காப்பார் யாரும் உண்டோ
புரியா மொழியில் பேசி நிற்பார்



பத்துப் பிள்ளை பெற்ற அன்னை
பித்தாய்ப் போன சேதி போல
சொத்தாய் எம்மை ஈன்ற அன்னை
கத்திக் கத்தி மாழ்வாள் பாரும்

விற்றுக் கொண்டார் மானம் தன்னை
வீணே வாழும் வேலை கண்டார்
கற்றுக் கொண்டார் நாகரீகம்
கெட்டுப் போனார் தாயைக் கொன்று

விட்டார் தமிழ் பேச எண்ணார்
தப்பாய் தப்பாய் பேசி நின்றார்
கட்டார் தமிழ் சேலை விட்டார்
கெட்டார் மதி விட்டார் இங்கே

முத்தாய் கண்ணில் நீரை விட்டு
இத்தாய் மண்ணில் வாடுகின்றாள்
சொத்தாய் இவர் சேர்க்க வெண்ணி
சென்றார் சொந்த நாட்டை விட்டார்

கற்பார் பெரும் நூலை எல்லாம்
கல்லார் தமிழ் நூலை எண்ணார்
இப்பார் மீது எங்கே தமிழ் அதை
அப்பால் போக விட்டார் அம்மா

நற்றாய் எமை பெற்றாய் நீயே
நாளும் வாழ வைத்தாய் தாயே
குற்றம் செய்தார் கேட்டால் நீயும்
குந்திக் கொள்வாய் மாழ்வாயம்மா

(1988)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதரராய் வாழ்ந்திடுங்கள்



சீதனமாம் சீர் கெட்ட
சங்கதியைக் கேட்கின்றார்
ஆதலினால் தமிழனுக்கு
அடியோடு வேறுகுணம்

ஒற்றுமையே இல்லாமல்
ஓரினமே என்று சொன்னால்
நாற்றமிகு இக்கதையை
நம்பிடுவர் யாருளரோ

அடுத்தவனின் வீட்டினிலே
நடக்கிறது என்னவென
அடுக்கடுக்காய் கேள்விகளை
அடுக்கிடுவர் தனிக்குணம் தான்

பொய்பேச எத்தனித்து
பொய்யாக வாழுகின்றார்
ஐயயோ தமிழன்னை
மெய்யாக அழுகின்றாள்

ஆதலினால் நான் இங்கு
அடிபணிந்து வேண்டுவது
மோதலினைக் கை கழுவி
சோதரராய் வாழ்ந்திடுங்கள்

தமிழே தமிழின் கண்மணியே
தினமே கொஞ்சம் சிந்திப்பாய்
அமிழ்தத் தமிழை அழவைத்து
அழகு காட்ட முனையாதே



## சாற்றுவோம் நாமெல்லாம் ஏற்றமிகு தமிழரென்று



இறைவனவன் படைப்பினிலே
இரு சாதி மனிதர் குலம்
கறைபடிந்த மனிதனவன்
கருத்தினிலே பல சாதி

சாதி என்ற சொல்லில் என்ன
சேதி இவர் கண்டு விட்டார்
மோதி தினம் சாவதிலே
மந்திகளாய் மாறி விட்டார்

மார் தட்டில் பேசுகிறார்
மாளவேண்டும் சாதியென
பாரினிலே சாதி வரன்
பார்க்கின்றார் மகள் வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையுண்டு உடலுண்டு
திறமைகளும் பலவுண்டு
நிலை ரெண்டு மூன்றானால்
நிறைவென்ன அதிலுண்டு

சாதிரெத்தம் உடம்பினிலே
சங்கமித்து பாய்கிறதாம்
நீதி கெட்ட மனிதா சொல்
இரத்தம் என்ன பல நிறமா?

சாதிக் கொரு கோவில்கட்டி
சாம்பராணி புகைக்கையிலே
சோதி அருள் கிடைக்கவில்லை
சாதி வெறி புகையுதம்மா

நீதி நெறி நாட்டில் இன்று
நேசமுடன் தோன்றுதற்கு
சாதி வெறி மக்கள் மனம்
சாக வேண்டும் சரித்திரத்தில்

சந்தனத்தைப் பூசி தினம்
சந்தி வலம் வருவதனால்
செந்தமிழில் பட்ட கறை
செத்திடாது கேட்டிடுவீர்

போற்றும் எழில் வாழ்வுபெற
மாற்றிடுவீர் இழி கொள்கை
சாற்றிடுவோம் நாம் எல்லாம்
ஏற்றம் மிகு தமிழரென்று



## தாய்க்குலமே ஜாக்கிரதை



என்னடா உலகமிது
எத்தனை கோலமிது
புன்மைகள் பூத்து விட்ட
புரிந்திடாக் காலமிது
ஆணென்ற பெண்ணென்ற
அம்சமதும் மாறிவிட்ட
வீணான உலகினிலே
வாழுகின்றோம் என்ன பயன்

இங்கிதமே இல்லாத
இங்கிலீசுப் படக்காட்சி
எங்கு இதைச் செப்பிடுவோம்
என்னபயன் கண்டு விட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைற்வெட்டு பின்வெட்டு
தலையதுவும் குறைவெட்டு
சயிக்கிளிலே பறக்கின்ற
சிங்காரக் காட்சியிது

கருவிழியில் மையிட்டு
கருஞ்சாத்துப் பொட்டிட்டு
கால்களிலே கொலுசிட்ட
கன்னியிவள் தமிழென்றால்
ஐயகோ என் செய்வோம்
தமிழ்ச் சேலை காணவில்லை
விதவிதமாய் கிழித்துவிட்ட
புதுச் சட்டை காணுகிறோம்

வண்ணமான கோலமதால்
பிறர் பார்வை உம்மீது
பக்குவமாய் திருப்பி விட்டு
பாவி என்று ஏசாதீர்
பொருட்காட்சி போலிருந்தால்
பார்வையாளர் தோன்றிடுவார்
பக்குவமாய் நீர் இருந்து
பண்புடனே வாழ்ந்திடுவீர்

நாகரீக உடையென்று
நாடகமா போடுகிறீர்
நாணுகின்றார் பார்ப்பவர்கள்
கண்பெற்ற குற்றமதால்
அங்கமதைக் காட்டுவதால்
ஆகிடாது நற்பெயரும்
தங்கமாக நடந்திடுக்கள்
தாய்க்குலமே ஜாக்கிரதை



## தூக்கமே தொலைந்து போ



படிக்கின்ற நேரமதை
கெடுக்கின்ற நித்திரையே
விடுக்கின்றேன் தூதொன்று
விடுதலையைத் தாராயோ

நாளைக்குப் பரீட்சையென
நாம் நினைத்துப் புத்தகத்தை
நாட்டமுடன் விரிக்கையிலே
நம்கதியைப் பார்த்தீரா

நாலுவரி பிடித்து விட
நூறு தரம் படித்த விட்டோம்
நாடியிலே கைவைத்து
நாலுதரம் தூங்கி விட்டோம்

துணியினிலே நீர் நனைத்து
தூங்கு கண்ணில் ஒற்றினாலும்
தணியவில்லை தூக்கமதும்
தாவியல்லோ வருகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘டொக்’கென்று மேசையிலே
நம் தலையும் மோதி விழ
‘டக்’கென்று கண் விழித்து
வெட்கமுடன் பார்க்கின்றோம்

முகம் கழுவி வரும் போது
முழுத்தூக்கம் பறந்து விடும்
அகம் முழுதும் மகிழ்ச்சியுடன்
அமர்ந்து விட்டால் மறுதூக்கம்

தலையாட்டிப் பொம்மையென
தலையாடி விழும்போது
நிலைமறந்து நம் தலையை
கலையுடனே ரசிக்கின்றார்

வெடிச் சிரிப்பு சிரித்து எமை
வேடிக்கை பார்க்கின்றார்
துடிக்கின்றோம் தூக்கத்தால்
படித்திடவும் முடியவில்லை


சத்தமாய் படித்திட்டால்
செத்திடுமாம் தூக்கமென
சக்தியோடு சத்தமிட்டால்
சத்தமெல்லோ செத்திடுது

நேரத்தைக் கடத்திப் பின்பு
நாம் படுக்கச் செல்லுகிறோம்
நித்திரையும் தூங்கியதால்
சத்துராதிப் படிப்பென்றோம்

நித்திரையே மாணவர்க்கு
சத்துருவே தொலைந்துபோ
நாம் விரும்பும் நேரமதில்
பத்திரமாய் வந்துபோ



## குறிஞ்சி வாழ்வு



வானுயர்ந்த குன்றுகளும்
தேனெடுக்கும் குமரிகளும்
ஊண் எடுத்து மகிழ்ந்திருக்கும்
உறைவிடமாம் குறிஞ்சியிலே
தேன் நிறைந்த கனி வகையும்
தெவிட்டாத வாழ்க்கையதும்
காணுகின்ற காட்சியெலாம்
காதலிக்கத் தூண்டுதடா

தினைப்புலத்துக் காவலுக்கு
கன்னியர்கள் காத்திருக்க
வனப்புமிகு காட்டினிலே
காளையர்கள் வேட்டையாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிடையே கானகத்தில்
கண்ட கண்கள் மின்னலிட
துடிதுடிக்கும் காதல் மனம்
தோன்றுவதும் இங்கே தான்

சோலையிலே காதலித்து
சேமநலம் அறிவதற்கும்
காளைகளும் குமரிகளும்
சேருதற்கும் வாழுதற்கும்
கோலமிட்ட சூழலிதை
குறிஞ்சி நிலம் தருவதனால்
காதலுக்குப் பெயர் போன
காவியமே குறிஞ்சி நிலம்

உணர்ச்சிகளைப் பரிமாறி
உணர்வுகளைத் தருகின்ற
புணர்ச்சியெனும் அகவொழுக்கம்
பொருந்தியது குறிஞ்சி நிலம்
பசு நிரையைக் கவர்ந்து விட்ட
பகைவருடன் போர் தொடுக்க
படை திரட்டி கொடி தூக்கி
பக்குவங்கள் பல செய்வார்

வெட்சிமலர் சூடி ஒரு
வேங்கையென போர் செய்து
கட்சியாக குறிஞ்சி மக்கள்
கலந்துறைந்து வாழ்வதனால்
வெட்சியெனும் போரொழுக்கம்
வென்றெடுக்கும் தூயொழுக்கம்
பட்சமுள்ள குறிஞ்சி மாந்தர்
போரொழுக்கம் ஆனதடா

(1989)



## பெண்



அடுப்பூதும் பெண்களுக்கு
உயர்கல்விப் படிப்பெதற்கு
இடுப்பொடிய வேலை செய்ய
பிறந்துவிட்டோம் அவர் நினைப்பு

துடுக்கொழிப்போம் எனமொழிந்து -அவள்
இடுப்பொடியச் செய்பவரே
அடுக்கடுக்காய் பெறுவதற்கா -இவள்
அவதரித்தாள் பூமியிலே

படுக்கையிலே தேவை அவள்
பிரச்சனைகள் தேவையில்லை
உரித்தெடுத்து உருவியது
உடையை அல்ல உள்ளமும் தான்

இறையவனே சமவுரிமை
இயன்றவரை கொடுத்து விட்டான்
குறையதுதான் எனநினைத்தோ
குட்டை மனம் கொண்டுவிட்டார்

குறைபிடிக்க வந்துவிட்டார் -தம்
குற்றங்களைப் புதைய விட்டார்
திறை கொடுக்கும் அரசனல்ல -அவள்
நிறை உருவின் சின்னமடா

பறை அடித்துச் செப்பி விட்டோம் -உம்
செவிப்பறையில் ஏறவில்லை
அறை கொடுக்க வேண்டுமடா -சில
அடைத்து விட்ட காதுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சரிதானோ

காய்த்தெரிக்கும் பால் நிலவு
பேயுலவும் நேரமிது
நாய் நரிகள் ஊளையிடும்
நள்ளிரவு நேரமிது
காய்ந்துதிரும் சருகளின்
சரசரத்த ஓசையூடே
சாய்ந்திருந்தோம் கதை பேச
மாந்தோப்பு மூலையிலே

என்னவளை நானிழுத்து
ஏந்திழையே என மொழிந்து
கன்னமதில் முத்தமிடக்
காத்திருந்த கணப்பொழுதில்
எங்கிருந்தோ தம்பி தம்பி
என்றழைக்கும் ஒலி கேட்டு
சின்னவளைக் கரம் நெகிழ
சிந்தி நின்றேன் பெருவியர்வை

பேயழைக்க இல்லையப்பா
நானழைத்தேன் உன்னடியின்
கீழிருந்து பேசுகின்றேன்
கேளும் ஒரு வார்த்தை என
கட்டளைக்கு நான் பணிந்து
கண் பரவித் தேடுகையில்
மண்ணில் கிடந்த மாங்கொட்டை
என்னைப் பார்த்து இயம்பிற்று



என் மகனே அன்றொரு நாள்
எந்தனையே நீ சுவைத்து
மண்ணிதனில் வீசி விட்டாய்
மனதினிலே மறந்திருப்பாய்
என் தசையை நீ சுவைத்து
உன்னுடலில் கலந்ததனால்
என்னுடலாய் ஆகிவிட்டாய்
என் மகனே கேளுமடா

உன்னுடைய செயல்காண
உள்ளமெலாம் வேகுதடா
கண்ணிரண்டும் கூசுதடா
கண்ணறாவிக் காட்சியினால்
பெற்றவர்கள் பெற்றுவிட்டார்
பெருமை தரும் பிள்ளையென்று
கற்றவராய் காண்பதற்கு
கனவுலகில் வாழுகிறார்

குற்றமறக் கண்விழித்து
குறிப்பெடுத்துப் படிப்பதாக
நித்தமுமே நினைத்தவரும்
நிம்மதியாய் தூங்குகிறார்
கண்ணுறக்கி அவர் தூக்க
காத்திருந்து காத்திருந்து
பின்புறமாய் வந்திருந்து
பேசுகிறாய் காதலுடன்

சுவைத்து விட்டு எறிந்தாலும்
முளைத்திடுவேன் இன்னொரு நாள்
கிளை பரப்பி பலன் கொடுக்கும்
கனி மரமாய் நான் பிறப்பேன் -உனை
விதைத்து விட்டார் பெற்றவர்கள்
வித்தகராய் மாறுமுன்னே
வதைத்துருக்கும் காதலிலே
நீ விழுதல் சரிதானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி



பட்டங்கள் பெறவேண்டும்
பதவியிலே வாழ வேண்டும்
திட்டங்களோடு வாழ்வு
சீதனத்தால் ஏறவேண்டும்

வீட்டோடு காரோடு
வீறு நடை போட வேண்டும்
நாட்டோடு ஒத்து வாழ
நற்புகழும் பெற வேண்டும்

இத்தனையும் இன்று இளம்
மாணவர்கள் கொள்கையெனில்
சிந்தனைக்கு இடமில்லை
சுயநலமே உருவெடுக்கும்

உத்தியோகம் ஒன்றினையே
உயிராக நேசித்து
புத்தியாகக் கற்றாலும்
அதனாலே பலன் என்ன

சத்தியமாய் கூறுகிறேன்
அதனாலே பலன் இல்லை
புத்தியாகக் கற்ற கல்வி
புரிய வேண்டும் சாதனைகள்





# மனமே வென்றுவிடு

அலைகள் ஓய்வதில்லை -தன்
நிலையில் தாழ்வதில்லை
உலையும் மனங்களுமே -தன்
நினைவில் சாவதில்லை
நிலையா வாழ்வினிலே -வரும்
மலைபோல் துன்பமெல்லாம்
தொலைந்து போனாலும் -அதன்
துயரம் சாவதில்லை
கடுகாய் நினைப்பதெல்லாம் -பெரும்
வடுவாய் போவதுண்டு
கெடுவாய் என நினைக்க -அது
நெடுநாள் தொடர்வதுண்டு
முடிவாய் போனதெல்லாம் -புது
தொடர்பாய் வருவதுண்டு
மடிந்து போகையிலும் -மனம்
மறந்து போவதில்லை
மனமே நின்று விடு
நினைவை வென்றுவிடு
நலமே வாழ்வதற்கு
நாளும் வாழ்ந்துவிடு
நன்மை நினைவுகளை -எம்
நடையில் சேர்த்துவிடு
புன்மை நினைவுகளை
குழியில் மூடிவிடு
வெற்றி பெற்றிடவும் -புது
வேகம் தந்து விடு
கொற்றம் சாய்கையிலும் -அதன்
துயரம் துறந்து விடு
சிட்டாய் பறந்து விட -புது
சிறகைத் தந்து விடு
பட்டுச் சிறகொடிந்தால் -அதை
முற்றாய் மறந்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றமனம்



கருவினிலே உருவெடுத்து
உருவினிலே உரம்பெற்று
தெருவினிலே தலை நிமிர்ந்து
தரணியிலே மகன் வாழ
குருதியிலே தமை நனைத்து
கருகி தினம் சருகெனவே
அருந்தவத்தின் புதல்வன் என
அரவணைக்கும் பெற்றமனம்



## வாழ்த்துக்கள் நண்பா



அகவை இருபத்து ஒன்றில்
அடிவைக்கும்
உவகை கொண்டோனே
உமக்கு வணக்கங்கள்

பருவம் பயங்கரமே -அதில்
கவனம் வேண்டுமென
உருவம் இல்லோனை
உருகி வேண்டுகிறேன்

பாரில் புல் கூட -உன்
புகழைப் பாடுமென
நாளில் வாழ்த்துகிறேன்
நன்மை பெற வேண்டி

தரணி தலை சாய்க்கும் -பெரும்
தரமே பெற வேண்டும்
மரணி அன்பினுக்காய்
நன்மை பெற வேண்டி

சான்றோர் சென்ற வழி
செல்வாய் எனதன்பா
ஆன்றோர் சொன்னமுறை
ஆவாய் என் நண்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்றோர் உலகமதில் -பெரும்
இழிமை உண்டு என
காண்பாய் கண்ட வழி
கண்ணீர் பெருகுதடா

நீண்டாமை ஒழிக்க -ஒரு
புத்தர் அவதரித்தார்
வேண்டாம் பகையெனவே
யேசு மனுவெடுத்தார்

அகிம்சா வழி காண
காந்தி பிறப்பெடுத்தார்
அன்பே மயமென்று
சிவனே கூறி நின்றார்

இங்கே பிறப்பெடுத்த -நீர்
என்ன செய்யவென
வந்து அவதரித்தீர்
விளங்க வேண்டுமப்பா

உம்மை ஈன்று விட்ட -புவி
நம்பி ஏங்கு முன்னே
அம்பாய் புறப்படுமே
அவனி வாழ்ந்திடவே

துன்பம் கொல்வதற்கு - வெந்
துயரம் வெல்வதற்கு
வந்த பிறப்பென்று
வியக்க வேண்டுமடா

நண்பா புறப்படுவாய் -நலம்
நாடி அறப்படிப்பாய்
கண்பார் துன்பநிலை அதன்
பின்னே சென்றிடுவாய்



# பெண்ணே பெண்ணே



பூ வென்பார் புரியாத
புதிரென்பார் பெண்குலத்தை
பேயென்பார் அருளான
தாயென்பார் அவனியிலே
யாரென்ன சொன்னாலும்
நானிங்கு கூறுவது
பேயல்ல பெருமை நிறை
பொக்கிசமே பெண்ணென்று


தொட்டவர்கள் விலகி நின்று
கெட்டவளே என மொழிவார்
கட்டழகு மேனியதை
கண்ணாலும் மேய்ந்திடுவார்
வட்டமிடும் உலகினிலே
துட்டருண்டு பெண்மகளே
திட்டமிட்டு வாழ்ந்து விடு
தன் மனதைக் காத்து விடு

காதலித்த பெண்ணொருத்தி
கை கழுவி ஓடிவிட்டால்
மூதலித்துக் கூறிடுவார்
பெண்குலமே வேசியென
பேதலிக்கும் மனமெல்லாம்
பேச்சிழந்து போகுதடா
ஆதலினால் பெண்ணுனக்கு
அறிவுரைகள் கூறுகின்றேன்

கண்டவுடன் சிரிக்காதே
சிரித்துவிட்டால் கதைக்காதே
கதைத்த பின்பு காதலித்தால்
கைகழுவிப் போகாதே
கொண்டவனின் கரங்களையே
கெட்டியாகக் பற்றிவிடு
கண்டவர்கள் அதிசயிக்க
கண்ணிறைய வாழ்ந்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒன்றுமில்லை

மாடி வீடில்லை
மண்குடிசை தானுமில்லை
கோடி பணம் தேடி
கோபுரத்தில் வாழவில்லை
வாடி நான் இங்கு
வேதனையில் வேகையிலே
தேடி வந்தாயே
தேனாய் நின்றாயே
ஆடி அசைந்தாடும்
அன்னம் நானில்லை
பாடிக் களிக்கின்ற
பறவை நானில்லை
கூடிக் குலவாத
கூட்டுப் புழுநாடி
ஓடி வந்தாய் நீ
நீடு வாழ்ந்துவிடு



## தனிவழி



பெண்ணொருத்தி தனிவழியில்
சென்றிடுதல் பாவமென
மண்ணுலகில் யார் வகுத்தார்
மானிடனே கூறிடுவாய்
வீதியிலே நடமாட
ஏனுரிமை இல்லையிங்கு
வேதனையைக் கொடுப்போரே
வீரரிக்கு நீர் தாமோ?

ஆதவனின் கீழுலகம்
இயங்குகின்ற போதினிலே
மோதிடாமல் நடந்திடுவீர்
மேன்மையென காட்டிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராத்திரியில் றோட்டளந்து
ராகமொரு பாட்டிசைத்து
ஆக்கினைகள் புரிகின்றீர்
அழகாமோ ஆடவர்க்கு

பொழுதான வேளையிலே
பெண்ணொருத்தி புறப்பட்டால்
அழகாக அடிவைத்து
அவள் பின்னே நடக்கின்றீர்

இருளான இடம் காண
இடைபற்றி இழுக்கின்றீர்
மருளோடு அவள் கத்த
வாய் பொத்தி வதைக்கின்றீர்

கை நீட்டி கழுத்தினிலே
கிடக்கிறதை தேடுகிறீர்
ஐயய்யோ எனக் கூற
அப்பாலே ஓடுகிறீர்

என்ன இது கேவலம்
இயம்பிடுதல் வெட்கமடா
புன்மைகளைப் புரியாதீர்
பூவுலகப் பூவையர்க்கு

பெண்களுக்கு தனி வழியில்
அலுவலென்ன என்பதனை
பண்புடனே கேட்கிறது
புரிகிறது ஆண்குலமே

தேவையின்றி யாரிங்கும்
தாரணியில் நடப்பதில்லை
ஆனதினால் நீரிங்கு
ஆன பிழை செய்யாதீர்



## மழை



சடசடவென மரம் சரிந்திடச் சரிந்திட
சோவெனப் பொழிந்ததுவே
படபடவென மனம் துடித்திடப் பெருமுழம்
வானில் கேட்டதுவே
வெடவெட வெனவே நடுங்கிடும் மேனி
விறகாய் விறைத்ததுவே
சுடச் சுட நெருப்பில் காய்ந்திடல் போதும்
என மனம் உரைத்ததுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுவாய்

தொட்டுத் தழுவிடத் தென்றல்
மறுத்திடப் -பூ
மொட்டும் விரிந்திடுமோ?
தாய்
பட்டுத் தலையினை கோதி
வளர்த்திடாப் -பிள்ளை
தளிர்த்திடுமோ?
நீர்
விட்டுத் தெரியாத் தளிரும்
தருவாய் -தலையைத்
தூக்கிடுமோ?
வான்
கொட்டும் நீரை மறுத்துப்
போனால் பூமி
பிழைத்திடுமோ?
சொட்டும் தேனைப் பூவும்
மறுத்தால் வண்டும்
என்செய்யும்?
வெட்டித் தவிர்த்த
சிறகைப் பார்த்துக் கிளியும்
என் செய்யும்?
சிட்டாய் சிறகை
வீசிப் பறக்க
உள்ளே ஆசையுண்டு -நான்
பெட்டை என்ற
பேராய் உள்ளேன்
முடியா பூமியிலே
குட்டக்குட்டக்
குனிந்து போனால்
சரியா என்மனமே -நீ
முட்டிப் பார்க்க
முயலாதிருப்பது
முடிவா சொல்மனமே

(1990)



## மீண்டும் பிலாக்கணம்

மிருகத் தனத்தின்
இரக்கமற்ற இதயத்தின்
உச்சக்கட்டம்
கடந்த சுவடுகள் அப்படியே
தடம் மாறவில்லை
உறைந்த குருதியில்
உருகிவரும் நிணநீர் கூட
இன்னும் காயவில்லை
அதற்குள் இன்னொரு களம்
இரத்தம்குடிக்கும்
காட்டேரிக் கூட்டம்
அழுகையின் ஓலம்
அழுகையின் அவலங்கள்
இந்தப் பிலாக்கணங்கள்
எப்போது ஓயும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நிலையாமை

ஆடிக்குள்ளிருந்து எனை
ஊடுருவும் பாவையே
பாடிக்களிக்குதடி உனை
பார்த்திருக்கத் தூண்டுதடி
மூடித் திறக்கின்ற
மாய விழிக் கண்ணிரண்டு
கூடிச் சிரிக்குதடி
கூரெனவே நோக்குதடி
வாடித் துவளாத
வண்ணமலர்ப் பெண்ணே
நீடித்திடுமாமோ
நிந்தன் எழில் வண்ணம்
ஓடித் தொலைகின்ற
ஒவ்வொரு நாள் போக
நாடிச் சேருமடி
நல்ல முதுத் தோற்றம்
கூர்விழிகள் இரண்டிங்கு
குழி விழுந்து போகுமடி
வழிதெரிய வில்லையென
தடி பிடிக்க நேருமடி
கொவ்வையிதழ் பின்னிருந்து
கொஞ்சுகின்ற பல்விழுந்து
பொக்கையிலே புன்னகையை
பொங்கிடவும் வேண்டுமடி
வண்ண எழில் திருமுகமும்
வாடும் எழில் போகுபடி
எண்ணிறைந்த மேடுபள்ளம்
ஏந்திழையே தோன்றுமடி
தோகைமயிற் கருங்கூந்தல்
தும்பை மலர் போலாகும்
தாமரையே பேரழகே
நின் அழகு வாடுமடி
தந்தமென மின்னுமுடல்
கந்தலாகும் பொன்மயிலே
சொந்தமில்லை உந்தனுக்கு
விந்தையெழில் சொந்தமில்லை





## ஏக்கம்

காண்கின்ற காட்சியெலாம் களிப்பூட்டும் -அந்த
காட்சியெலாம் மாட்சி காண
கதை சொல்லும்
வீண்வம்பு பேசாத புதுமனிதன் -அவன்
விளம்புகின்ற சொல்லெல்லாம்
விடிவு காணும்
ஆணுக்குப் பெண்ணடிமை இல்லை இல்லை -அந்த
பெண்ணுக்கும் ஆணடிமை
இல்லை இல்லை
தேனுக்கும் தீனிக்கும் பஞ்சமில்லை -இந்த
தீனின்றி செத்தவர்கள்
இங்கு இல்லை
வானுக்கும் மண்ணுக்கும் தூரமில்லை -இந்த
மண்மேலே வானுண்டு
பொய்மையில்லை
கண்மேலே நிழலாடும் புதுக்கனவு -இது
கனவன்று நனவாகும்
நாளுமென்று?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று வழி இல்லையோ?

கண்ணுறக்கம் இல்லையே
கண்ணெரியலாச்சுதே
உண்ணுவதும் இன்றியே
உடல் மெலியலாகுதே

எண்ணுவதும் ஒருவழி
என்று போகலாச்சுது
மண்ணுலகில் பாரமாய்
மாறிவிட்டேன் வீணிலே

எழுது கோலை ஏந்தினால்
எழுத்து வர மறுக்குது
முழுமனதும் காதலாலே
முழுகி ஆழ்ந்து போகுது

சிந்தனைகள் கெட்டு மனம்
சிறுமை இன்பம் வேண்டுது
எந்தையே இக் காதலாலே
எந்தன் நெஞ்சு வேகுது
நிம்மதியும் இன்றி மனம்



நித்தம் நித்தம் மாயுது
நித்தம் மன மேடையிலே
நாடகமே நிகழுது

வேலை செய்ய வெறுக்குது
வேளை வீணே போகுது
மூலைகளைக் காணுகையில்
மூளை கெட்டு ஓடுது

ஆற்ற வேண்டிக் காரியம்
ஆறிக் காத்து இருக்குது
மாற்று வழி இன்றி மனம்
மாறிமாறி ஆடுது

ஆசையிலே உள்மனது
அறிவிழந்து போகுது
ஆண்டவனே என் மனதை
ஆற்ற வழி என்னவோ

காமன் தந்த நோயிலே
காலம் போக வேண்டுமோ
சாதனை செய் வாழ்வு இங்கு
சோதனையாய் போகுமோ

சீர் வழியில் சென்றிட
சிறந்த பாதை இருக்கையில்
மாறுவழிக் காதலில்
மனமழிதல் நன்மையோ

மாற்றவழி இல்லையோ
மாற்ற வழி என்னவோ
ஏற்ற வாழ்வு பெற்றிட
ஏற்ற வழி உள்ளதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆசைக் கனவு

முற்றத்துக் கற்களெல்லாம்
முக்கனியாய் ஆகுக
மூலையிலே தென்னைமரம்
முத்துக்குலை ஈனுக
தந்தி மரக் கம்பமெலாம்
தங்கமாக மாறுக
பட்டமரக் கொப்புகளில்
பட்டு ஆடை காய்க்குக
பாழடைந்த பாழ்கிணறில்
பால் சுரந்து ஊறுக
தேவையில்லா யாவுமிங்கு
தேவையென மாறுக
பஞ்சமில்லா வாழ்வு இங்கு
வந்ததென்று கூவுக
நெஞ்சு நிறை இன்பமதில்
நின்றெழுந்து பாடுக



## சின்னக் குருவியே



பட்டுச் சிறகைத் தட்டிப் பறந்திடும்
சின்னப் பறவையே -கை
எட்டும் தொலைவில்
முட்டிப்பறந்திட மாட்டாயா
சுட்டித் தனத்துடன் சுந்தரத் தோழரை
கூட்டும் பறவையே -நான்
கட்டித் தருகின்ற சின்னக் கூட்டில்
உறைய மாட்டாயா?
மொட்டு விரிந்து தேனை அருந்திடும்
சின்னப் பறவையே -நான்
தொட்டுத் தருகின்ற தேனை சுவைத்து
அருந்த மாட்டாயா?
எட்டுத் திக்கும் பாடி மகிழும்
சின்னப் பறவையே -ஒரு
மெட்டு இசைத்து எனது ஆசை
நிறைக்க மாட்டாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இறை(யே)வா

பூதலத்தில் ஏன் பிறந்தேன்
புரியவில்லை ஆதவனே
புன்னகையில் ஓர் உயிரும்
பூமியிலே காணவில்லை
சோம்பியிருப்பாரிடையே
சொர்க்கமில்லை சோதியனே
வீம்பு நிறை மாந்தரிலே
வீறுமில்லை சீருமில்லை
பட்டினியால் பலவுயிரும்
பட்டழுந்தி வீழுகையில்
பெட்டியிலே காசு பணம்
பொத்திவைப்ப தேனிறையே
வஞ்சம் நிறை வார்த்தைகளில்
நெஞ்சம் வேகலாகுதையா
பிஞ்சுகளின் உள்ள மலர்
நஞ்சுவூறலாகுதையோ
கஞ்சர்களும் கயவர்களும்
கள்வெறிகொள் காமர்களும்
நஞ்சர்களும் நாக்கினிலே
நேர்மையிலா வஞ்சர்களும்
மிஞ்சி விட்ட மீக்குலவில்
மாதவனே காத்திட வா
அஞ்சுகிறேன் அன்புருவே
ஆதரவு காட்டிட வா?



## கருமுகிலுக்கு



வெண்ணிலவே ஏன் இன்று
இப்படிச் சிரிக்கின்றாய் ஓகோ
இன்று நீ வளர்மதியல்ல..........வளர்ந்தமதி
தூரிய வானத்தில் சுந்தர இதயம் நீ
ஏய் கருமுகிலே......
உனக்கென்ன வேலை அங்கே?
எதற்காக அலைகின்றாய்
எவ்வளவு தான் முயன்றாலும்
உன்னால் வெண்ணிலா போலாக முடியாது
மின்னும் அந்தச் சுந்தரத் தாரகையாகக்கூட
உன்னால் முடியாது
பின்னும் ஏன்.............
போ போ கீழே கீழே மிக மிகக் கீழே
பூமியைப் பார்
உன்மழைக்காக ஏக்கமுடன்
நோக்கும் பயிர்களைப் பார்
சுமக்க முடியாமல் சுமக்கும்
உன் அன்புச் சுமையை
அவர்களுக்குக் கொடு
அவர்கள் சிரிப்பார்கள்
உன் சுமை குறையும்
உன் வாழ்வு முடியும் போது
பூமி சிரிக்கும் வானம் வெளிக்கும்
போ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி சில வரிகள்...

கவிஞர் நாவண்ணனின் (சிரேஷ்ட) புதல்வியான திருமதி நெலோமி அன்ரனி குருஸ் பள்ளிப்பருவம் முதல் கவி புனையும் ஆற்றல் மிக்கவர். யாழ் பல்கலைக்கழக பட்டதாரியான இவர் ஆசிரியர் தொழில் வாண்மையை விருத்தி செய்ய பட்டப்பின் கல்வி டிப்ளோமாவினை முடித்துவிட்டு முதுகலைமாணி பட்டத்திற்காக கல்விப் பயணத்தை தொடர்ந்து கொண்டிருப்பவர். 1990—91ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக கவிதைப்போட்டிகளில் முதலிடம் பெற்றதன் மூலம் தனக்கென முத்திரையை பதிக்க ஆரம்பித்தார். 2003. 2004 ஆம் ஆண்டுகளில் தமிழீழ கல்விமேம்பாட்டு பேரவை நடாத்திய தமிழ் மொழி எழுத்தாக்கத் திறன் போட்டியில் வெற்றி பெற்றதன் பின் நெலோமி என்ற பெயரை எம்மாவட்ட ஆசிரியர் வட்டங்கள் முணுமுணுக்கத் தொடங்கின. 2005ஆம் ஆண்டு செட்டிகுள பிரதேச இலக்கிய கலை விழாவில் "கடல் காவு கொண்ட கண்ணீர்கள்" என்ற கவியரங்கின் போது சபையோரை இந்த அமைதிப் பூவுக்குள் இத்தனை கவி வெடிகளா? என வியக்க வைத்தார். நினைத்தவுடன் வருவதல்ல கவிதை. இதயம் கனத்தவுடன் வருவதுதான் கவிதை என்பதை நிரூபித்து நிற்கும்.

சாதிச்சண்டை சமயச்சண்டை
மோதுவதால் கண்ணீர்
பெரும்பான்மை சிறுபான்மை
பேதங்களால் கண்ணீர்
தினம் நூறு சண்டைகளால்
தீராத கண்ணீர்
பணமுள்ளோர் ஏழையென்ற
பாகுபாட்டுக் கண்ணீர்
சுனாமியின் கண்ணீரென்ன
இதைவிடவா கண்ணீர்?

என்ற வரிகளின் மூலம் எம் தேசத்தில் தொடர்கின்ற அவலங்களை கோடிட்டு காட்டியுள்ளார். இந் நூலின் இறுதிப்பக்கம் தான் மிகவும் வேதனையானது. அதில் தானே "முற்றும்" என்ற சொல் இருக்கின்றது.

இக் கவித்தாயின் தலைப்பிரசவம் சுகப்பிரசவமாக இறைவனை வேண்டி. இப்பெண்ணின் வெற்றிக்கு முன்னிற்கும் ஆண்மகன் நண்பன் குருஸினை வாழ்த்தி... அன்புடன்...

எம்.சேகுராஜிது (S.L.P.S)
(கவியாசகன்)
முதலியார் குளம்.
2005.09.17

ISBN: 955-99420-0-X

Multivision. 024 2223669

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org